
விலை ரூ. 7-50

# இந்து கலாசாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

## ஆலயந்தோறும்
# அறநெறிப் பாடசாலைகள்





தெய்வீகப்பணி செய்யுமாறு இந்து அமைச்சு வேண்டுகோள்!

## தலைநகரில் மீண்டும்

# இந்து இளைஞர் மன்றம்

– ஜெய்நிவேத் –




**கொ**ழும்பு மாநகரில் வாழும் இந்துக்களின் வரலாற்றில் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் மீண்டும் ''இந்து இளைஞர் மன்றம்'' ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தலைநகரில் பரந்துபட்டு வாழும் இந்துக்களின் மத்தியில் பெரும் வரவேற்பை அளித்துள்ளது.

கொழும்பில் எல்லா இனத்தையும், எல்லா மதத்தையும் சார்ந்த மக்கள் காலம் காலமாக வாழ்ந்து வருகின்றனர். பௌத்தர்களுக்கு அடுத்தபடியாக கொழும்பில் இந்துக்களே பெரும்பான்மையினர் பௌத்த இளைஞர் மன்றம் (வை. எம். பி. ஏ.), கிறிஸ்தவ இளைஞர் மன்றம் (வை. எம். சி. ஏ.), முஸ்லிம் இளைஞர் மன்றம் (வை. எம். எம். ஏ.), என்று பௌத்தர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் ஆங்காங்கே எத்தனையோ இளைஞர் மன்றங்கள் இருந்தபோதும், இந்து இளைஞர்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரு இந்து இளைஞர் மன்றம் இல்லாதிருந்தமை ஒரு பெருங் குறையாகவே இருந்து வந்துள்ளது. இப்பெருங் குறையை நிவர்த்திசெய்யுமுகமாக, நெருக்கடி மிகுந்த இக்கால கட்டத்தில் உதயமாகிய கொழும்பு இந்து இளைஞர் மன்றம் இந்து சமுதாயத்தின் மத்தியில் நிச்சயமாக ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் என்பது இந்துக்களின் மாபெரும் எதிர்பார்ப்பாகும்,

கொழும்பில் இந்துக்கள் மத்தியிலேயே எத்தனையோ மன்றங்களும், சங்கங்களும் ஆரம்பிக்கப் பட்டுள்ளபோதிலும், இன்று ஒரு சில மன்றங்களும் சங்கங்களும்தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஏனையவைகளுள் ஒரு சில ஸ்தம்பித நிலையிலும் மற்றையவைகள் அங்குரார்ப்பண வைபவத்துடனேயே அடையாளமே தெரியாமலும் போய்விட்டன.

அப்படி செயல்பட்டுக்கொண்டிருக்கும் சங்கங்களிலும் மன்றங்களிலும் கூட விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில சங்க்ங்களும், மன்றங்களும் தான் எமது இந்து சமுதாயத்திற்கு அளப்பரிய சேவையை செய்துகொண்டிருக்கின்றன.

இப்படியான சில முன்னோடியான மன்றங்களின் ஆதரவுடனும், சமுதாயத்திற்கு நல்வழி காட்டும் பல அனுபவசாலிகளின் அறிவுரைகளுடனும், ஆதரவுடனும் சமயப்பணியைவிட சமுதாயப்பணியையே நோக்கமாகக் கொண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதே இந்த கொழும்பு இந்து இளைஞர் மன்றம்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

**இந்து கலாசாரம்**

மலர்: 3 ஆனித் திங்கள் முதலாம் நாள் இதழ்: 7

## இந்து மாமன்றத்திற்கு ஒரு பெரும் "வெற்றிடம்"

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தனது 62 வது வயதில் கடந்த 15-7-1992ல் கொழும்பில் இறையடி எய்துள்ளமை இந்து சமுதாயத்தையே ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஏறக்குறைய இருபத்திஏழு வருடங்களுக்கு முன்னர், இலங்கை அரசாங்கம் கொழும்பு மாநகரின் இருதயமாக விளங்கும் சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தையில் ஒரு கால் ஏக்கர் விஸ்தீரனமுள்ள நிலத்தை அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கென வழங்கியிருந்தது. அப்போது அத்திவாரம் இடப்பட்டதுடன் இந்து மாமன்ற கட்டிடம் அப்படியே அதற்குமேல் எழும்பாமலே விட்டுவிட்டது

கொழும்பு வாழ் இந்து மக்களின் அக்கறையின்மையும் உதாசீனமுமே அகில இலங்கை இந்து மாமன்ற கட்டிடம் தொடர்ந்து எழும்பாமல் விட்டதற்கு மூலகாரணம் ஆகும். ஏனைய அனைத்து மதங்களுக்கும் தமக்கென ஒரு கட்டிடம் இருந்தபோதும் இந்துக்களுக்கென ஒரு கட்டிடம் இல்லாதது பெரும் குறையாகவே இருந்து வந்துள்ளது. இதனை 'இந்து கலாசாரம்'' தனது ஆசிரிய தலையங்கத்தில் பல தடவைகள் சுட்டிக்காட்டியதை வாசக நேயர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

ஆயினும் அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவராக பொறுப்பேற்ற பின்னர் கடந்த ஆண்டு மீண்டும் இந்து மாமன்ற கட்டிட நிர்மாண வேலைகள் ஆரம்பமாகின

அமரர் பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது சொந்தப் பணத்தில் சுமார் ஒரு கோடி ரூபா வரை இந்து மாமன்ற கட்டிட நிதிக்காக வழங்கி ஆறுமாடி கட்டிடமாக கட்ட உத்தேசிக்கப்பட்ட கட்டிடத்தை நான்குமாடிகள் நிர்மாண வேலைகளை ஒரு வருட காலத்தில் பூர்த்தி செய்துள்ளமை ஒரு பெரும் சாதனையாகவே கொள்ள வேண்டியுள்ளது.

அமரரது அயரா உழைப்பினாலும், இடைவிடாத ஊக்கத்தாலும் செயல்வடிவம் பெற்றுக்கொண்டிருந்த இந்து மாமன்ற கட்டிடம் இனியும் அதே வேகத்தில் தொடருமா? அப்படி தொடர்ந்து கட்டிட வேலைகள் விரைவில் பூர்த்தியாவதற்கு அமரர் பாலசுப்பிரமணியத்தைப் போன்று ஒரு மகாபுருஷர் அவரது வெற்றிடத்தை நிரப்பி அன்னார் விட்டுச் சென்ற பணியை மேலும் தொடர அயராது உழைப்பாரா?

அமரர் பாலசுப்பிரமணியத்தின் வெற்றிடம் விரைவில் அவரைப் போன்ற ஒரு உத்தம புருஷரால் பூர்த்தி செய்யப்பட்டு, அகில இலங்க இந்து மாமன்ற கட்டிடத்தை மிக விரைவில் பூர்த்தி செய்து இந்து மக்கள் அனைவரும் பயன் பெறும் வண்ணம் செய்வதே இந்து சமுதாயம் அமரர் பாலசுப்பிரமணியத்திற்கு அளிக்கும் மிக உயர்ந்த அஞ்சலியாகும்.

## ஆலயங்கள்தோறும் அறநெறிப்பாடசாலைகள்

எமது நாட்டில் இந்து ஆலயங்கள் இல்லாத பட்டினமோ, நகரமோ, தோட்டங்களோ இல்லை எனலாம். ஆயினும் ஏனைய மதங்கள் தமது ஒவ்வொரு வழிபாட்டுத் தலங்களிலும் நடத்தும் சமய வகுப்புகளைப் போன்று எமது மதத்தவர்கள் சமய வகுப்புகளை நடத்த முன் வராதது வருந்தத்தக்கதே.

ஆயினும் இன்றைய இளந்தலைமுறையினரின் அயரா உழைப்பினாலும், இடைவிடாத முயற்சியினாலும், நாட்டில் பரவலாக இருக்கும் இந்து மன்றங்களும், சமய நிறுவனங்களும் ஆங்காங்கே பல அறநெறிப்பாடசாலைகளை ஆரம்பித்து இந்து சிறார்களுக்கு சமயவகுப்புகளையும், ஒழுக்க நெறியையும் போதிப்பதுடன் சத்துணவுகளையும் வழங்கி வ்ருவது மிகவும் போற்றற்குரியதாகும். ஆயினும் இலங்கையின் எல்லா பகுதிகளிலும் இம்முறை நடைமுறையில் இல்லாதமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

இவ்வாண்டில் இந்துசமய இராஜாங்க அமைச்சு நடத்திய ஒரு தரமதிப்பீட்டின்படி, 18 மாவட்டங்களைச் சேர்ந்த 225 பாடசாலைகள் இந்துசமயத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆயினும் தற்போது சில பாகங்களில் நிலவும் சீரற்ற நிலமையினால் சில பாடசாலைகள் இயங்காதிருக்கின்றன. இந்த அறநெறிப்பாடசாலைகளில் ஏறக்குறைய 25,000 மாணவர்கள் பயிலுவதாகவும், 951 ஆசிரியர்கள் தொண்டு அடிப்படையில் கற்பிப்பதாகவும் திணைக்களம் அறிவிக்கின்றது.

கடந்த 11-7-1992ல் இந்து சமயத் திணைக்களம் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கொன்றை ஏற்பாடு செய்து, ஒரு பொதுவான பாடத்திட்டமொன்றினையும், அது சம்பந்தமான மூன்று நூல்களையும் வெளியிட்டு வைத்தது.

இந்து சமய இராஜாங்க அமைச்சர் இந்து மதத்தவர் மத்தியிலே அறநெறிப்பாடசாலைகளை கட்டாயமாக அமுல் நடத்துவதற்கு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதே.

இவற்றை சரிவர நடத்துவதற்கு தேவையான நிதியினை இந்துசமய இராஜாங்க அமைச்சினால் வழங்கமுடியாததால், ஆலயங்களின் தர்மகர்த்தாசபையினர் வருமானத்தின் ஒருபகுதியை இந்த நல்ல முயற்சியான அறநெறிப்பாடசாலைகள் இயங்குவதற்கு மனமுவந்தளிக்க முன்வரவேண்டும். இந்துமன்றங்களும் சமய நிறுவனங்களும் தொண்டு அடிப்படையீல் அறநெறிப்பாடசாலைகளில் சேவை செய்ய பின்தங்கக் கூடாது. நலன்விரும்பிகளும் தமது பூரண பங்களிப்பினை நல்க வேண்டும்.

இந்து ஆலயங்கள், நிறுவனங்கள்தோறும் அறநெறிப்பாடசாலைகள் தங்குதடையின்றி நடைபெற்றுவருமாயின் எமது இந்து சமூகத்தின் மத்தியிலே புத்தொளி வீசி சுபீட்சமான கட்டுக்கோப்பான வாழ்க்கைமுறையொன்று உருவாகி எண்திசையிலும் இந்துக்களின் புகழ்பரவும் என்பது திண்ணம்.

# சமயம் ஒரு வாழ்க்கை முறை

## இந்துசமய கலாசார திணைக்களத்தின்

### அறநெறிப்பாடசாலைகளுக்கான பாடத்திட்ட அறிமுகம்

— **திருமதி பூமணிகுலசிங்கம்** (விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்). —

இன்றைய உலகில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், தொழில்நுட்ப விருத்தி என்பவற்றின் விளைவாக சமூகப் பொருளாதாரக் கலாசார மாற்றங்கள் தோன்றி மனிதனின் சமுதாய வாழ்க்கையில் பல்வேறுபட்ட மாற்றங்களை உருவாக்கியுள்ளது. பணம் சம்பாதிப்பதும், உலகியல் இன்பங்களை அனுபவித்தலுமே மனிதனது கவனமும், சிந்தனையும் செல்கின்றது. இதன் நிமித்தம் மனிதன் தனது பொறுப்புகளையும், கடமைகளையும் அறியாதவனாகவும், சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணியினை விளங்காதவனாயும், தான் செல்லவேண்டிய பாதையிலிருந்து விலகியும் செல்கிறான். அத்தோடு மனித மனம் பரபரப்பிற்கும், வேகத்திற்கும் உட்படுவதால் நல்லெண்ணங்களையும், உயர்பண்புகளையும் இழக்க நேரிடுகிறது. எனவே இன்று மனிதர் ஒரு அமைதியற்ற நிலையிலிருந்து அச்சம், பகைமை, பொறாமை, போட்டி, பதவி மோகம் போன்ற எதிர்மறைப் பண்புகளை வளர்க்கவும் நேரிடுகின்றது. இதன் விளைவாகச் சமூகம் தனது சமநிலையினை இழக்கின்றது. நாட்டின் ஒற்றுமையும், அமைதியும் நிலைகுலைகின்றது. வாழ்க்கையின் நோக்கம் யாது என்பதை விளங்காதவர்களாய் திக்கற்ற நிலையிலிருப்போரை அந்நிலையிலிருந்து திருத்தியமைப்பதற்கு ஒழுக்க வாழ்வுடன் இணைந்த சமயக்கல்வி இளமையிலேயே போதிப்பது பெரியோர் புரியக்கூடிய சேவையாகும். சிறார்களைத் தகுந்த முறையில் வளர்த்தல் அதாவது: **அறிவில் நல்லெண்ணங்களை விதைத்து, உள்ளத்தில் அவற்றைத் தூண்டுவித்து செயலில் நன்னடத்தையினைப்** பழக்கிவிட்டால் அவர்கள் பொறுப்புடன் கடமைகளைப் புரிந்து, தன்னையும் பக்குவப்படுத்தி, சமூகவாழ்விற்கு ஏற்றோராவர்.

### இளைஞர் ஆணைக்குழுவின் அறிக்கை

இன்றைய சிறுவர்களே நாளைய சமூகத்தினைக் கட்டியாழ்பவர்கள். எனவே அவர்களது அறிவும்,

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)



கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி பூமணி குலசிங்கம் அறநெறிப்பாடசாலைகளுக்கான பாடத்திட்டம் பற்றிய அறிமுகவுரை நிகழ்த்துகின்றார்,

# சமயம் ஓர் வாழ்க்கை...

சிந்தனையும், உணர்வும், செயலும் தம்மைப் பூரணமாக அறியவைத்து மனப்பக்குவத்தினையடைய வழி வகுக்க வேண்டும். அப்பொழுது சமூகத்தின் ஒற்றுமையினையும், அமைதியையும் வளர்க்க வலியவராவர். இந்த இலக்கினை அடையும் நோக்கத்துடனே பாடசாலைகளின் கலைத்திட்டத்தில் இலங்கை சுதந்திரமடைந்த பின்பு சமயம் ஓர் பாடமாகச் சேர்க்கப்பட்டது. இன்று சமயம் ஓர் கட்டாயப்பாடமாகவும் விளங்குகிறது. ஆனால் இப்பாடம் மற்றைய பாடங்களைப் போன்று அறிவு மையமாகவும் பரீட்சை மையமுமாகவே போதிக்கப்படுகிறது. இதனால் பிள்ளைகளின் மனப்பாங்கு விழுமியங்களில், வாழ்வில், நடத்தையில் ஒருவகையான திருத்தமும் காணக்கூடியதாகவில்லை. இதனை 1990ம் ஆண்டின்

இந்து சமயத்திற்கும் 1. தத்துவம், 2. அதனை விளக்கி வலியுறுத்தி அறிவினை வளர்க்க நூல்கள், 3. அவற்றை நடைமுறைப்படுத்தி தகுந்த அனுபவத்தைப் பெறுவதற்கு கிரியைகள், சடங்குகள், பண்டிகைகள் என உண்டு. சமய நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், உபதேசங்கள் என்பவற்றை விளக்கத்துடன் கற்பதனால் அறிவு வளரும். இந்த அறிவு மன எழுச்சிகளைப் பண்படுத்தி ஓர் புதிய உணர்வினைப் பிறப்பிக்க வலியது. இந்த உணர்வான நடத்தையில், சிந்தனையில், செயலில் திருத்தங்களைப் பிறப்பிக்க ஓர் தூண்டல் சக்தியாக அமையும். எனவே சமயத்தினை சரிவரக் கற்று, அதன்படி ஒழுகுவதே அதன் நோக்கம் இதனையே திருவள்ளுவரும் வலியுறுத்தியுள்ளார்.

''கற்கக் கசடறக் கற்றபின் நிற்க
அதற்குத் தக'' என்றார்.




பிரதிப்பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் திருமதி பூமணி குலசிங்கம், யாழ் பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு க. நாகேஸ்வரன், அமைச்சர் தேவராஜ், பணிப்பாளர் சண்முகலிங்கம் ஆகியோர் வீற்றிருப்பதையும் காணலாம்.

இளைஞர் ஆணைக்குழுவினரின் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது. சமயம் சில நம்பிக்கைகளையும், கிரியைகளையும், சடங்குகள், பண்டிகைகளையும் கொண்டதன்றே கருதப்படுகிறது.

## வாழ்க்கைக்கு சமயம் தூண்டல் சக்தி

இந்த நிலையில் சமயம் என்றால் என்ன? என்ற கேள்வி எழும்புகிறது. சமயம் ஓர் வாழ்க்கை முறை. உயர் பண்புகளைக் கொண்ட ஓர் வாழ்க்கைக்கு வழிவகுத்து அதனை விளங்கிக்கொள்வதற்கு, பயிற்சி அனுபவத்தையும் அளித்து, மனிதனை வழிநடத்துகின்றது. மற்றும் சமயங்களைப் போன்று எமது

இன்றைய கல்விச் சிந்தனையாளர்கூட கல்வியில் இம் மூன்று நோக்கங்களையும் காண்கின்றனர். 1. அறிவுசார், 2 உணர்வுசார், 3. உள இயக்கசார் திறன்கள். தமிழ் இலக்கியத்தில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் இதனையே மையமாகக் கொண்டிருப்பது காணக்கூடியதாயுள்ளது.

## சுயவளர்ச்சிக்கு வித்திடல்

சமயம் எம்மை இறைவன் பால் இட்டுச்செல்லக் கூடியதாகும். இதற்கு நாமும் இறைவனைப் போன்ற தூய்மையும், அன்பும் நிறைந்தவராதல் அவசியம்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# சமயம் ஓர்...

(முன்பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுதே இறை அருளைப் பெறமுடியும். அருளின்றி எதையும் வெற்றிகரமாகச் செய்யமுடியாது. எமது ஞானிகள், ரிஷிகள் மனித மேம்பாட்டிற்கு அவனது மனதின் முக்கியத்துவத்தினை உணர்ந்தனர். மனம் ஒருவனை உயர்த்தவும், தாழ்த்தவும் வலியது. எனவே மனதைப் பக்குவப்படுத்துவதே நோக்கமாதல் வேண்டும் என்று கருதினர். பக்குவப்பட்ட மனதில் அன்பு, இரக்கம், பொறுப்பு, நேர்மை, சகிப்பு, மனத்தைரியம், வலிமை, தியாகம், சேவை, சகோதரத்துவம் போன்ற உயர்பண்புகள் மலரும். இந்த மனப் பக்குவத்தினையடைவதற்கு வழிமுறைகளையும் வகுத்தனர். உயர்பண்புகள் போதனை மூலம் பெறப்படுவனவன்று. கடைப்பிடித்தலின் மூலமே அமையும். என்ற உண்மையினை அறிந்த நம் முன்னோர் பயிற்சி அனுபவத்திற்கு முதலிடம் கொடுத்தனர். ஆலயங்களை அமைத்து அவற்றிற்கு முக்கியத்துவமளித்தனர். மனதை ஒரு நிலைப்படுத்தி வழிபடும் முறை தோன்றிற்று. அத்தோடு வாரம்தோறும், மாதந்தோறும் விசேட தினங்களை உருவாக்கி அதனூடாகப் பயிற்சி அளிக்கும் வண்ணம் பிரார்த்தனை வழிபாட்டிற்கு இடம் அளித்துள்ளனர். இறை அன்பு, பக்தி, நம்பிக்கையினை வளர்த்தனர். மன அமைதியடைய இது வழிவகுத்தது. அமைதியான மனதிலேயே நற்சிந்தனை தோன்றும். இது சுய வளர்ச்சிக்கு அவசியமாகும்.

அத்துடன் கிரியைகள், சடங்குகள், பண்டிகைகள் வாயிலாக இனிய உணவையுண்டு பாடி மகிழ்வதுடன், அன்பு, பிறர்க்குதவுதல், கூடிச் செயலாற்றல், சகோதரத்துவம் போன்ற சமூகப்பண்புகளை மலரச் செய்ய வழிவகுத்துள்ளது. எனவே இவை வெறும் கிரியைகள், சடங்குகளல்ல. மனிதனை மனிதனாக வாழவைக்கும் யுத்திகளாகும். இதனைச் சிறுவர்கள் விளங்கி நடப்பது அவசியமாகும்.

## அன்னியராட்சியால் ஏற்பட்ட விளைவு

முற்காலத்தில் கல்வி, ஒழுக்க நெறிக்கல்வியென்று கருதப்பட்டதனால் கோயில்களில், விகாரைகளில், பள்ளிகளில் போதிக்கப்பட்டது. சமய நூல்களும், இலக்கியமும் ஒழுக்கத்தையே மையமாகக் கொண்டன. அமைதியான சூழலில் நூல்களிலிருந்து பெற்ற அனுபவம் அறிவு முதிர்ச்சிக்கு வித்திட்டது. குருகுலக் கல்விமுறையும் அத்தகையதே. காலப்போக்கில் அன்னியராட்சியின் பயனாக முறைமைப்பாடசாலைகள் தோன்றின. இவை தொழிலையும், பரீட்சையையுமே மையமாகக் கொண்டதனால் போட்டி, பொறாமை, அச்சம், சுயநலம், தந்திரம் போன்ற பண்புகளை வளர்த்தன.

## அறநெறிப் பாடத்திட்டம்

அத்துடன் கல்விப்போதனாமுறை, ஆராய்ந்தறிதல், கண்டுபிடித்தல், வினாவிடை கூறல் என்ற சிந்தனையினை வளர்க்கும். கற்றல் முறைகளுக்குப் பதிலாக ஆசிரியரிடம் அமைதியாகவிருந்து சொல்வதைக் கேட்டும், திருப்பிக் கூறுபவர்களாகவும், கீழ்ப்படிவானராயும் பழக்கப்பட்டனர். இவையாவும் அவர்களைக் கீழ் நிலைக்கு இழுத்துச் செல்ல வலியனவாக அமைந்துள்ளன. புதிய கல்வித்திட்டங்கள் சிறுவர்களை இந்த நிலையிலிருந்து விடுவிக்க முயல்

(தொடர்ச்சி 9ம் பக்கம்)


---

### அறநெறிப் பாடசாலைகள் பற்றிய

# தீர்மானம்

- அரசாங்கத்தின் பாடவிதானத்துக்கு மேலதிகமாக சமய அறிவையும் ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் இளம் சமுதாயத்தினரிடத்து வளர்ப்பதில் அறநெறிப் பாடசாலைகள் முக்கிய பங்கு வகித்து நாட்டிற்கு நற்பிரசைகளை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டிருப்பதனால், ஆலயங்களும் இந்து நிறுவனங்களும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து நடத்த முன்வருவதைப் பிரதானமான சமுதாயப் பணியாகக் கொள்ள வேண்டும்.
- இவ்வாறான அறநெறிப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கட்கான வசதிகள், அங்கு கற்பிக்கும் தொண்டை மேற்கொள்ளும் ஆசிரியர்கட்கான சன்மானங்கள், பாடசாலை இயங்குவதற்கான கட்டிடம், தளபாடம் போன்றவற்றிற்கான வளத்தை, சம்பந்தப்பட்ட ஆலயங்களும் நிறுவனங்களும் தமது வளத்திலிருந்தும், நலன்விரும்பிகளின் உதவியைப் பெற்றுத் தேடிக் கொள்ள வேண்டும்.
- ஆண்டுதோறும் சிறுதொகையை மானியமாக வழங்கும் இவ் அறநெறிப் பாடசாலைகளிற் பயிலும் மாணவர்கட்கான பாட நூல்களையும், ஆசிரியர்கட்கான பயிற்சிகளையும், அறநெறிப் பாடசாலைகள், வழிகாட்டல்கள் போன்றவற்றையும் இந்துசமய கலாசார அமைச்சும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் வழங்குவதே மிகப் பயனுள்ளதாக அமையும்.

# கொழும்பில் ஆடிவேல் விழா



அடியார்கள் புடைசூழ ஆடிவேல் ரத பவனி

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் 1983ம் ஆண்டு யூலைமாதம் இலங்கையில் ஏற்பட்ட மிகமோசமான வன்செயலை எவரும் எளிதில் மறந்து விடமாட்டார்கள். இந்த வன்செயலின்போது ஆடிவேல் ரதமும் பலத்த சேதத்திற்குள்ளாக்கப்பட்டது. இதற்குபின்னர் நடந்த ஆடிவேல் விழா சோபிக்காது பொலிவிழந்தே காணப்பட்டது.


ஆனால் இம்முறை கொழும்பு மாநகரம் ஆடிவேல் விழாவின் போது திருவிழாக்கோலம் பூண்டு இலங்கையின் பல இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு முருகப்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பு நகரில் நடைபெறும் பெரிய இந்துமத விழாவான ஆடிவேல் விழா கடந்த 11-7-1992 முதல் 15-7-1992 வரை மிகக் கோலாகலமாக நடைபெற்றமை இந்து மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமைதியான முறையில் நடந்தேறிய இப்பெரு விழா இலங்கைத்திருநாட்டிற்கே நிரந்தரமான அமைதியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் அதி மேதகு ஜனாதிபதி, மாண்புமிகு பிரதம மந்திரி, இந்திய உயர்ஸ்தானிகர், இந்து கலாசார இராஜாங்க அமைச்சர், கைத்தொழில் இராஜாங்க அமைச்சர், கொழும்பு மாநகர பிரதி மேயர், போன்ற முக்கிய பிரமுகர்களுடன் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட கொழும்பு இந்து இளைஞர் மன்றமும், (Y.M.H.A.) ஆடிவேல் ரத பவனியை வரவேற்று விஷேட பூஜைகளை நடத்தினர்.

தமிழகத்திலிருந்து விஷேடமாக வருகை தந்த பிரபல கிளாரினட் வித்துவான் ஏ. கே. ஸி. நடராஜன் அடந்த நல்லூர் ஜி. சீனிவாசன், தவில் வித்துவான் மன்னர்க்குடி எம். ஆர். வாசுதேவன், இசை முரசு கோவிலூர் கே. ஜி. கல்யாணசுந்தரம், நாதஸ்வர மேதை கே. எஸ். கணேசன், திருநெல்வேலி எம். எஸ். மூத்தையா குழுவினரின் நையாண்டி மேளம் ஆகியோரின் இசை நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்திருந்தன. அத்துடன் பேராசிரியை இளம்பிறை மணிமாறனின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றுள்ளமை ஆடிவேல் பக்தர்களுக்கு மேலும் தித்திப்பாக இருந்தது.



மாண்புமிகு அமைச்சர் தொண்டமான், மாண்புமிகு
இராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமி
ஆகியோர் வரவேற்கும் காட்சி






இந்துகலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு
பி. பி தேவராஜ் ஆடிவேல் ரத பவனியை
வரவேற்கும் காட்சி



கொழும்பு மாநகர பிரதிமேயர் உயர்திரு கணேச
லிங்கம் ஆடிவேல் ரத பவனியை வரவேற்கும் காட்சி




இந்திய உயர்ஸ்தானிகர் திரு என். என். ஜா
வரவேற்கும் காட்சி



கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தினர்
ஆடிவேல் ரத பவனியை வரவேற்கும் காட்சி



ஆடிவேல் விழாவிற்காக இந்தியாவிலிருந்து
வருகைதந்த இசைக்குழுவினர்




காலிவீதி இந்துமதி லொட்ஜ் உரிமையாளர்களான
திரு கே. கே. இலட்சுமணன், திரு தா. லோகேஸ்
வரன் ஆகியோர் வரவேற்கும் காட்சி

## மகாலட்சுமி கடாட்சம் நிறைந்தது

# இலங்கைத் திருநாடு

— திருமதி சூடாமணி சடகோபன் புகழுரை —



தமிழகத்தில் இருந்து வருகை தந்து மூன்று மாத காலமாக இலங்கையின் பல பாகங்களிலும் இன்னிசையுடன் கூடிய கதாப்பிரசங்கங்கள் நடாத்தி ஆன்மீகப் புத்துணர்ச்சியை ஏற்படுத்திய திருமதி சூடாமணி சடகோபன் அம்மையாருக்கு பொன்னாடை போர்த்தியும் மாலைகள் அணிவித்தும் பொன்யானைப் பரிசில்களும் பொற்கிழிகளும் வழங்குவித்து விருதும் வழங்கி பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயத்தில் கௌரவித்தார் அதன் அறங்காவலர் செந்தில் வேள்.

கல்வி இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திருமதி இராஜமனோஹரி புலேந்திரன் அவர்கள் பிரதம அதியாக இவ்விழாவில் கலந்து உரையாற்றி சிறப்பித்தார்.

விழா தொடக்கத்தில் பிரபல சமூக சேவகி திருமதி மல்லிகாதேவி சரவணபவன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அறங்காவலர் செந்தில் வேளை தலைமை தாங்க அழைத்தார். ஆனால் அறங்காவலரோ வியப்பில் ஆழ்த்தும் வகையில் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை விநாயகப் பெருமானிடமே ஒப்படைத்தார். இது பற்றி அவர் விளக்கிக் கூறியதாவது:-

என்னைத் தலைமை தாங்க அழைத்த அன்பிற்கு நன்றி செலுத்துகிறேன். இந்த ஆலயத்திலே போற்றுதலுக்குரிய முறை ஒன்று எந்த நிகழ்ச்சி நடந்தாலும் எம்பெருமானே முன்னின்று தலைமை தாங்கும் சீரிய பாரம்பரியம்.

வளமான களனி கங்கா தீரத்தில் பேலியாகொடை ஷேத்திரத்தில் வீற்றிருந்து பரந்த இந்த பூவுலகத்தைச் சிறந்தமுறையில் பரிபாலனம் செய்கின்ற ஸ்ரீ பூபால விநாயகப் பெருமானே இன்றைய நிகழ்ச்சிகளுக்கும் தலைமை தாங்கி அருள வேண்டும் என்று எம்பெருமானை வேண்டிக் கொண்டு அட்டமாசித்திகளையும் அருள வல்ல ஆனைமுகப் பெருமானுடைய ஆக்ஞைப்படி நிகழ்ச்சிகளை நெறிப்படுத்த முயல்கிறேன், என்றார்.

மேலும் அவர் பேசுகையில்:-

அருமையும் பெருமையுமான புராண இதிகாசங்களினதும் தேவார் திருவாசக பாசுரங்களின் இனிமை, மகிமை, புதுமை எல்லாம் எம்முடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்னும் பரந்த நோக்குடன் கூடிய தமிழகத்திலிருந்து வருகை தந்து இசையுடன் கூடிய இனிய சொற்பொழிவுகளை ஆற்றி ஒரு மாபெரும் ஆன்மீகப் பேரெழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற போற்றுதலுக்குரிய திருமதி சூடாமணி சடகோபனை மிகுந்த பூரிப்புடன் வரவேற்கிறோம்.

(தொடர்ச்சி 29ம் பக்கம்)

# சமயம் ஓர் வாழ்க்கை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. இன்று கற்றல், கற்பித்தல், செயற்பாடுகள் யாவும் மாணவர்களின் அறிவில், சிந்தனையில், பழக்கவழக்கங்களில், செயலில் திருத்தங்களை ஏற் படுத்துவதையே நோக்காகக் கொண்டுள்ளன. இந்த நோக்கங்கள் யாவற்றிற்கும் இணங்கவே அறநெறிப் பாடசாலைகளுக்கான இப்புதிய பாடத்திட்டம் அமைந்துள்ளது. இந்து கலாசார அமைச்சும் வளரும் நாளைய சமூகத்தின் ஒழுக்கநெறி வளர்ச்சியில் எடுக் கும் இவ்வாக்கபூர்வமான முயற்சிகள் யாவும் பாராட் டத்தக்கன. அறநெறிப் பாடசாலைகள் மூலம் சிறு வர்களை நல்வழிப்படுத்திட எடுக்கும் முயற்சிகள் யாவும் நற்பயனை அளிக்க ஆசிரியர்களும், பெற்றோ ரும் ஒத்துழைப்பர் என்று கருதப்படுகிறது.

## புதிய பாடத்திட்டம்

சிறுவர்களிடத்தில் நல்லவர்களாக வருவதற்கு வேண்டிய இயல்புகள் அவரவரகத்திலேயே உண்டு. கல்விச் சிந்தனையாளர்களும், தற்கால ஞானிகளான சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்றா ரும் இதனை வலியுறுத்தியுள்ளனர். இன்றைய உள வியலாய்வுகளின் முடிவும் இதுவேயாகும். ஆனால் இவை மலர்வதற்குத் தகுந்த கற்றல் அனுபவங்களும், பயிற்சிகளும் இன்றியமையாதனவாகும். இந்த உள் ளார்ந்தமான நற்பண்புகளை மலரச் செய்வதே அற நெறிப்பாடசாலைகளின் நோக்கமும், செயற்பாடாக வும் இருக்க வேண்டும். இந்த எண்ணத்துடனேயே இப்புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் பார்த்துப் பழகுமியல்பினர். கற்ப தற்கு இயற்கையாகவே இவர்களிடம் ஆற்றல், ஆர் வம், தகைமையுண்டு எனவே ஆசிரியர்கள் தாமே உதாரணமாயிருந்து, சிறுவர் மீது அன்பை வெளிப் படையாகக்காட்டி அவர்களுடையநம்பிக்கை மதிப்பு, நல்லெண்ணம் என்பவற்றைப் பெற்று, கற்றல், கற் பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துதல் அவசிய மாகும். இதற்கு முன் ஆயத்தம் தேவையாகும். சிறு வர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்கு பாராட்டல், வெகுமதியளித்தல் போன்ற ஊக்கல் யுக்திகளைப் பயன்படுத்துவது நன்று. கற்பிக்கும் விடயம் பயனுள் ளதென்பதை அவர்கள் தெளிவாக உணர்ந்தால் தாமாகவே கற்பர். முறையான பாடசாலைகளைப் போன்று வரிசைக்கிரமமான வகுப்பறைத்தளபாடங் கள் தேவையில்லை. அமைதியான சூழல், இயற்கை எழில், காற்றோட்டமுள்ள இடங்கள் ஏற்றன. சிறு வர்கள் தாமே தமது சுற்றாடலைச் சுத்தம் செய்து ஒழுங்கமைப்பாராயின் சுற்றாடல் சுத்த அனுபவ அறிவையும் பெறுவர். வயதிற்கேற்றவாறு அவர்க ளுக்குப் பொறுப்புகளைக் கொடுத்து வகுப்பறையில் கலந்துரையாடல், வினாக்களைக் கேட்டு விளக்கத் தினைப் பெற, தாமாகவே தீர்வுகளை எடுக்கச் சந் தர்ப்பம் அளிப்பது அவசியமாகும்.

## அறிவு வளர்ச்சிக்கு ஏற்றதாகும்

அறநெறிப் பாடசாலைகள் தேவையின்பாலும் பெற்றார், சமூகத்தினர் விருப்பத்தின்பாலும் நிறுவப் படுகின்றன. சிறுவர்கள் ஆர்வத்துடன் வருகிறார்கள். பெற்றாரும் ஆதரவளிக்கின்றனர். ஆசிரியர்களும் அத் தொழிலைச் சேர்ந்தோராயில்லாவிட்டாலும், கடமை யுணர்வுடனும், சேவை மனப்பான்மையுடனும், சன் மானம் எதிர்பாராது மகிழ்ச்சியுடன் பணி புரிகின்ற னர். இத்தகைய சூழ்நிலை அறிவு வளர்ச்சிக்கு மிக வும் ஏற்றதாகும். அத்துடன் இந்துகலாசார அமைச் சின் பூரண ஒத்துழைப்பையும், ஊக்கலைத் தூண்ட வலியன. எனவே இப்பாடசாலைகள் எதிர்பார்க்கப் பட்ட இலக்கினை அடையும் என்ற நம்பிக்கை உண்டு.

## ஆலய வழிபாடு

இந்து சமயத்தில் ஆலய வழிபாட்டிற்கு ஓர் முக் கிய இடமுண்டு. உளத்தைப் பண்படுத்துவதே சமயத் தின் நோக்கம். எனவே தான் நம் சமயத்தை வளர்த்த முன்னோர் பல்கலைக்கழகங்களைக் கட்ட எண் ணாது, கோயில்களை எழுப்பினர். ஆன்மீகப் பாதை யில் மனிதனை இட்டுச் செல்வதே நோக்கமாயிருந் தது. இங்கு ஆண், பெண், உயர்வு, தாழ்வு, சிறுவர், முதியவர் என்ற வேறுபாடின்றி ஒரே நோக்குடன் வருகின்றனர். இறைபற்று, இறை நம்பிக்கை வழி யாக மனத்தைத் தூய்மை பெற இறை அருள் சேரும் என்ற விசுவாசம் யாவருக்குமுண்டு. ஆலயங்கள் மனதை ஒரு நிலைப்படுத்தி அமைதியினை வளர்ப்ப தற்குப் பயிற்சி அனுபவம் அளிக்கும். இத்தகைய தூய உள்ளத்திலேயே நல்லெண்ணங்கள் பிறக்கும் என் பதை வலியுறுத்த ஆலய வழிபாடு அப்பியாசத்தை அளிக்கின்றது. புறத்தூய்மை தேகாரோக்கியத்திற்கு அவசியம் போன்று அகத்தூய்மை உளவளர்ச்சிக்கு அவசியமென்பதை உணரவைக்க வேண்டும். பிரார்த் தனை, வழிபாடு, பக்தியுடன் பாடல், பூஜை அனு பவித்தல் எல்லாமே மனதைச் செம்மையாக்க உதவு வனவாகும். இதனை ஆசிரியர் எடுத்து விளக்கலும், செயற்பாடுகளில் ஆர்வத்துடன் பிள்ளைகளை ஈடு படுத்தலும் இன்றியமையாதனவாகும்.

# சமயம் ஓர் வாழ்க்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி)

## ஆசிரியர் - பெற்றோர் பொறுப்பு

சமயம் வெறும் நம்பிக்கைகளையும், வழிபாடுகள், கிரியைகள், சடங்குகள், பண்டிகைகளைக் கொண்டதன்று. இது சீரான, மகிழ்வுடைய வாழ்க்கைக்கு வழிவகுக்கும் ஓர் மார்க்கம் என்பதை உணரச் செய்தல்' சமயம் காட்டும் வாழ்க்கைப் பாதை மனிதனைத் தூயவனாக்கி நல்லெண்ணமுள்ள, நன்நடத்தையினைத் தனதாக்குமியல்பினனாக்கும். தன்னைச் செம்மைப்படுத்துவதுடன் தனது கடமைகளையும், பொறுப்புகளையும் சரிவரப் புரியமுணர்வினைத் தூண்டும் சக்தியுடையது. அறம், பொருள், இன்பம், வீடு மனதினது நல் வாழ்விற்கு வழிகாட்டுமென்று திருவள்ளுவர் தனது திருக்குறளில் புருடார்த்தங்களை வலியுத்தியுள்ளார். இந்து சமயத்தின் வாழ்க்கைத் தத்துவ ஒழுங்கு இதுவே. முழுமையான வாழ்வு அற்றஅடிப்படையில் அமையும்போது அன்பு நேர்மை, தூய்மை, கொல்லாமை, பரிவு, சகோதரத்துவம், சேவை என்னும் விழுமியங்கள் நிலைபெறும். எமது சமயம் எம்மை உலக வாழ்க்கையிலிருந்து விலகும்படி வற்புறுத்தவில்லை. உலக வாழ்க்கையில் இல்லறத்திலிருந்தே அற அடிப்படையில் செயற்படும் பொழுது எம்மை இறைவன்பால் இட்டுச்செல்லும் என்பதையே வலியுறுத்துகின்றது. மனிதன் விவாகம் புரிந்து, எப்படி வாழவேண்டுமென்பதைக் காட்டுகின்றது. வாழ்க்கைக்கு அவசியமானது பணம், இப்பணத்தை எப்படித் தேட வேண்டும், எந்த முறையில் செலவிட வேண்டும் எப்படி மனத்திருப்தியினையும், இன்பத்தையும் பெறுவதென்பதை விளக்குகின்றது, ஆசைகள், பற்றுகள் என்பன அளவளவாயமையும் போதே இன்பம் தோன்றும். சிந்தையின் நிறைவே செல்வம் என்பதை இலக்குமித் தத்துவம் விளக்குகின்றது. இவற்றைத் தெளிவுபடுத்துவதற்கென புராணக் கதைகளும், விரதங்களும் உண்டு. சமய விளக்கங்களை நாடும் இக்குமரப்பருவ மாணவர்களுக்குத் தகுந்த விளக்கங்களைக் கொடுத்து மனங்களில் ஒரு தெளிவினை உருவாக்கினால் அவர்களைச் சமயம் காட்டும் பாதையில் செல்ல உளம் தூண்ட வலியது. இப்பணியினை நிறைவேற்றும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும், பெற்றாருக்குமே உரியது.

## ஓர் ஆய்வுக்கண்ணோட்டம்

தாமரைத்தீவானின்

# "பிள்ளைமொழி"

— இரா வைத்திமாநிதி —

பாலும், தெளிதேனும், பாகும், பருப்பும், இவையெல்லாம் கலந்து உனக்கு நான் தருவேன் என்று பண்டைய காலம் தொட்டு நமது பெரியவர்கள் இறைன்பால் அன்பு கூர்ந்து பூாடி மகிழ்ந்தனர். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்பர். அதாவது, அன்பாக ஆதரவாக, இதமாக, இனிமையாக பழகுவரிடத்து குழந்தையும் தெய்வமும் குடிகொண்டு மகிழ்வார்கள்.

சிறுகை பிசைந்து குறுநகை நடந்து வரும் பாலர் முதல், நாடி, ஆடி, ஓடி அழகு பார்க்கும் சிறார் முதல் யாபேருக்கும் பொறுத்தமாக அஞ்சு பத்து வரிகளிலே அமுதமான வசனங்களோடு குழந்தைகளைக் கவரும், பழங்கள் பண்டங்கள், பயிர்கள், பண்டிகைகள், பண்டிதர்கள், பண்புகள், பிராணிகள் இன்னும் பலவைபற்றி அழகு தமிழில் ஆக்கம் பெற்று இருக்கின்றது "தாமரைத்தீவான்' எழுதிள்ள "பிள்ளை மொழி" குழந்தைப்பாடல்கள்.

இன்னும் உள்நோக்கினால், குழந்தைகள் மனதைக் கவர்ந்து நிலைத்து நிற்கும் வகையில்

1) தாயை மறக்காமல்......" என்னை சுமந்தவளே, ஈன்று வளர்த்தவளே உன்னை மறப்பேனோ ...' என்கின்றார்.

2) தமிழை மறக்காமல் ... "தமிழ்படிக்கப் போகின்றேன், தலை நிமிர்ந்து போகின்றேன், நிலைத்து இருந்து வாழ்த்துவேன்"... என்கிறார்.

3) தமிழ் பெரியாரைப் போற்றி "தமிழ் வளர்த்த வித்தகர், தமிழ் இனத்தின் சொத்து அவர் "என்று அழகாக ஆழமாக சுவாமி விபுலானந்தரை பாடி இருக்கின்றார்.

இருள் சூழ்ந்த இந்த காலகட்டத்திலே அமைதிக்காக அல்லல்பட்டு அலையும் சூழலில் அமைதியை நாடிய குழந்தைமனம் எப்படி இருக்கின்றது என்பதை " விண்வெளிக்குச் செல்கின்றேன், வேண்டு மட்டும் பறக்கின்றேன், அந்தரத்தில் நிற்கின்றேன், காய் மரங்கள் இல்லையே, காற்றும் நீரும் இல்லையே, ஆனால் அமைதி மட்டும் உண்டடா அது எமது மண்ணில் இல்லையே, ஏங்கி ஏங்கி வந்தேனே " ... என்று இதயத்தைப் பிளக்கின்றார்.

இன்னும் பல அருமையான பாடல் இருக்கின்றது. பார் அதிரும் பாடல்களைப் பாடிவைத்த பாரதியார். "ஓடி விளையாடு பாப்பா "... என்று செல்லமாக குழந்தைகளுக்கும் பாடிவைத்தார், என்று "தாமரைத்தீவான" அவர்களின் "பிள்ளை மொழி" என்ற குழந்தைகளுக்கான கவிதை நூல் மிகவும் அருமையாக இருக்கின்றது.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

## தலைநகரில் மீண்டும் இந்து . . .

(முகப்பு உள்பக்கத் தொடர்ச்சி)

இராமகிருஷ்ண மிஸன் என்பது உலகத்திற்கே மிகவும் உன்னதமான பணிகளை செய்யும் ஓர் ஒப்பற்ற உயர்ந்த ஸ்தாபனமாகும். அப்படிப்பட்ட கொழும்பு இராமகிருஷ்ண மிஸன் தலைவர் ஸ்ரீமத் ஆத்மகணானந்தா மகராஜ், சாஸ்தாதாஸன் பீடாதிபதி, பிரம்மஸ்ரீ பால ரவிசங்கரக்குருக்கள் போன்ற சமயப் பெரியார்களின் ஆசியுடன் தமது பணியை முன்னெடுத்துச் செல்ல முயன்று கொண்டிருக்கும் கொழும்பு இந்து இளைஞர் மன்றம் முன்னரைப் போலல்லாது உறுதியான ஒரு அத்திவாரத்துடன் இயங்க ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இம்மன்றம் மீண்டும் இயங்க ஆரம்பித்ததற்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஸன் சுவாமி ஸ்ரீமத் ஆத்மகணானந்தா மகராஜ், திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் கௌரவ செயலாளரும் இலங்கை இந்து இளைஞர் பேரவையின் துணைத் தலைமைச் செயலாளருமான திரு. செ. சிவபாதசுந்தரம் ஆகிய இருவருமே காரணகர்த்தாக்களாகும்.

இந்த இந்து இளைஞர் மன்றத்திற்கு அனுபவமிக்க பல மூத்த அறிஞர்களும், ஆர்வலர்களும் ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்க இன்னொரு முக்கிய அம்சமாகும்.

சமுதாயம் நல்ல முறையில் கட்டுக்கோப்புடன் திகழுமாயிருந்தால்தான் சமயமும் அங்கு பேணிப் பாதுகாத்து, அதன் உன்னத கோட்பாடுகளையும் உயர்ந்த இலட்சியங்களையும் கட்டிக்காக்க முடியும். அதேபோன்று ஒரு சமூகமானது நல்லமுறையில் பிரகாசிக்க சமயம் அத்தியாவசியமாகிறது. இதனால் சமயத்தை கட்டிக்காப்பது அம்மதத்தைத் தழுவும் ஒவ்வொருவரதும் கட்டாயமான கடமையாகும். அதேவேளை சமயத்தை மாத்திரம் சார்ந்திராது, தமது சமூகத்தின் அடிப்படை அத்தியாவசியமான தேவைகளையும் கருத்தில்கொண்டு வாழுவதே இக்கட்டான சூழ்நிலையில் இன்றைய மனிதனின் கடப்பாடாகும்.

வெறும் சமயப்பணியை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளாமல் எமது சமுதாயத்திற்கு ஒரு விழிப்புணர்வையும் அடிமட்டத்தில் வாழும் இந்து மதத்தை சார்ந்தவர்களுக்கு, அவர்களின் வாழ்க்கையில் ஒளிமயமான ஒரு எதிர்காலத்தை உண்டுபண்ணிக் கொடுப்பதற்கும் இந்த கொழும்பு இந்து இளைஞர் மன்றம் சிறந்த முறையில் சேவையாற்றப் போகின்றது என்பதில் எதுவித ஐயமுமில்லை.

'சங்கம் அமைத்து அன்று தமிழை வளர்த்தனர்
இன்றோ, சங்கம் அமைத்து சாதியை வளர்க்கின்றனர் இதே
கொழும்பு மாநகரில்''

இந்துக்களின் அவலநிலைக்கும் இழிநிலைக்கும் மூலகாரணம் இப்படியாக அவர்கள் மத்தியில் காணப்படும் சாதிவேற்றுமைகளும் பாகுபாடு உணர்வுகளுமேதான். இதன் காரணத்தால் நமது இந்து மக்கள் மத்தியிலே வெறுப்பு ஏற்பட்டு மாற்று மதத்திற்கு மதம் மாறுகின்றனர். ஆகவே நமது இன்றைய அவலநிலைக்குக் காரணம் ஒவ்வொரு இந்து குடிமகனும்தான் என்பதை எவராலும் மறுக்கமுடியாது.

ஆகவே, இந்த சாதி வேற்றுமைகளையும் பாகுபாடு உணர்வுகளையும் களையெடுத்து, மனிதகுலத்தில் ஆண்சாதி, பெண்சாதி என இரண்டைத்தவிர வேறு சாதிகள் இல்லையென்ற உயர்ந்த மனப்பான்மையை ஏற்படுத்தினால்தான் நமது இந்து சமூகம் உருப்பட்டு ஒற்றுமைப்பட்டு சிறந்த சமூகமாக மாறும் என்பது அநேகரின் ஏகோபித்த கருத்தாகும். இப்படி ஒரு சமூகம் இன்றோ அல்லது நாளையோ உருவாவதற்கு இளைஞர்களாலேதான் முடியும். நாளைய உலகை ஆளப்போகும் இன்றைய இளைஞர்கள் மனம் வைத்தால் எதையும் சாதிக்கலாம். இந்து இளைஞர்கள் ஒன்று திரண்டு எமது சமயத்தையும் சமுதாயத்தையும் நல்ல முறையில் கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

நகரின் ஒதுக்குப் புறங்களிலும் சேரிப் புறங்களிலும் எத்தனையோ இந்து சிறார்கள் கல்வி கற்க வசதியின்றி தமது எதிர்காலத்தையே சூன்யமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இப்படியான இவர்களை நேரில் சந்தித்து, அவர்களுக்கு கல்வி வசதிபெற ஆவண செய்யவேண்டும். இது அவர்களின் தலையாய கடமையாகும். திறமை இருந்தும் வறுமையின் காரணமாக கல்வியை தொடர முடியாது இடைநிறுத்தும் மாணவ சமுதாயத்திற்கு ஊக்கமளித்து தொடர்ந்து கற்க வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

இவைகளுடன், மேலும் முக்கியமானது ஒன்று. எல்லா மதத்தவர்க்கும் தங்களுக்கென ஒரு கட்டிடம் இருந்தபோதிலும் இந்து மதத்தவர்களான எமக்கு ஒரு கட்டிடம் இல்லாத குறையை வளர்ந்து வரும் இந்து மாமன்ற கட்டிடம் பூர்த்திசெய்யும். இந்த வளர்ந்து வரும் இந்து மாமன்ற கட்டிடத்தை விரைவில் பூர்த்திசெய்து இந்து சமுதாயம் கூடிய விரைவில் பயன் பெறும் வண்ணம் அதன் சகல செயல்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து உறுதுணையளிக்க முன்வர வேண்டும்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

# நம்மிடம் இல்லாத நல்லதுகள்

தொகுப்பு :- க. கனகராசா ஆதாரம் :- சிராமராஜ்யம்

கேரள மாநிலத்தில் அதிகாலை ஆலய வழிபாடு மிகவும் சிறப்பானது. மக்கள் சாரிசாரியாக அதிகாலை வழிபாட்டில் கலந்து கொள்ளுகிறார்கள். குளித்து முண்டு அணிந்து சுத்தமாக வருகிறார்கள். இதற்கு அநுசரணையாக அங்கு இயற்கை அளித்துள்ள செல்வம் நீர்வளம் ஆலயம் தோறும் சுத்தமான நீரூற்றுகள் உண்டு கிணற்று நீருக்குப் பஞ்சமில்லை இந்த வளத்தை மக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

மேலும் கேரளத்துக்கு தென்மேற்குப் பருவக் காற்றின் மழை நீர்வளத்தை அள்ளித்தருகிறது. இது கோடை காலத்துப்பருவ மழைகாற்று, ஜூன் ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் மழை தரும் பருவக் காற்று, அதில் எஞ்சிவருகிற தூறல்தான் குற்றால சீசன். அங்கிருந்து தப்பித்தவறி தமிழகத்துக்குள்ளே வரும் மேகங்கள் நமக்கு ஆடிப்பட்ட விதைப்புக்கு உதவிக் கரம் நீட்டுகிறது. தமிழகத்துக்கு உரிய மழை டிசம்பர், ஜனவரி, பிப்பரவரி மாதங்களில் பெய்யும் மழை இதன் காரணமாக மக்கள் மழைகாலங்களில் மழை நீரில் நனையகூசுகிறார்கள். கேரளத்தில் கோடை கால பருவ மழையாதலால் மழையில் நனைவது இதமாக உள்ளது. உடைநனையாதிருக்க குடை பிடிக்கிறார்களே அன்றி உடலை நனையாதிருக்க அன்று. ஆகவே மக்கள் அதிகாலையில் குளிப்பதையும் ஆலய வழிபாட்டுக்கு திறந்த மேனியுடன் வருவதையும் விரும்பிச்செய்கிறார்கள்.

---

கேரளத்து மாநிலத்திலுள்ள ஆலயங்களில் தட்சிணை என்ற பெயரால், கோயில் அர்ச்சகர்கள் பணம் பறிப்பதில்லை. ஆலயங்களில் வானுயர்ந்த கோபுரங்கள் இல்லை, உயரமான திருமதில்கள் இல்லை. ஆனால் வானுயர்ந்த வழிபாட்டு முறைகள் சிறப்பாக உள்ளன.

---

இதுபோல் இரவு எட்டு மணிக்கெல்லாம் ஆலயங்களில் சந்நிதி சாத்தப்பட்டு விடுகிறது. சிறப்பான விழாக்காலங்களைத்தவிர இரவு 8 மணிக்குமேல் ஆலயங்கள் அங்கு அமைதியாகிவிடுகின்றன. எங்களுடைய ஆலய தரிசனயாத்திரை நாட்களில் ஆலயங்களின் முன் மண்டபங்களில் இரவு நேரங்களில் தங்கினோம். அமைதியாக அயர்ந்து தூங்கி அதிகாலை எழுவதற்கு அதன் சூழ்நிலை உதவியாக இருந்தது கேரளத்து ஆலயங்களில் ஒலிபெருக்கிகளின் தொல்லைகள் இல்லை. பெரிய ஆலயங்களில் இனிமையான பக்திப்பாட்டுக்கள் மெல்லிய குரலில் ஒலிபரப்பப்பட்டன. சப்தமும் சந்தடியும் மிகக்குறைவு. விபூதி குங்குமமும் சந்தணம் போன்ற பிரசாதங்கள் இலைகளில் வழங்கப்படுகின்றன. ஆற்றங்கரைகளிலும் நீரோடை ஓரங்களிலும் வளர்ந்துள்ள தாமரை மற்றும் மூங்கில் இலைகள் ஏராளமாகக்கிடைப்பது இதற்குக்காரணம். ஆகவே, தமிழக ஆலயங்களில் காணப்படுவதைப் போல கைகளில் மீந்துள்ள பிரசாதத்தைத் தூண்களிலும் சுவர்களிலும் தடவி வீசிப்போடும் காட்சியை அங்கு காண்பதற்கில்லை. அங்கு ஆலயங்கள் எங்கும் தட்சிணை என்ற பெயரால் கோவில் அர்ச்சகர்கள் எவரும் பணம் பறிக்கவில்லை என்பது ஒரு சிறப்பு. காணிக்கைகளை மக்கள் உண்டியலில் சேர்க்கிறார்கள். தீபாராதனைத்தட்டுகளில் காசுபோடும் பழக்கமில்லை. அதை எதிர்பார்க்கும் அர்ச்சகர்களும் இல்லை. தமிழகத்திலுள்ள ஆலயங்களில் தட்சிணை நச்சரிப்பிலிருந்து தப்பி வீடு திரும்புவது கடினம். கேரளத்து ஆலயங்களில் வானுயர்ந்த கோபுரங்கள் இல்லை. உயரமான திருமதில்கள் இல்லை. ஆனால் வானுயர்ந்த வழிபாட்டு முறைகள் சிறப்பாகவுள்ளன.

இன்னும் ஒரு சிறப்பு கேரள ஆலய வளாகங்களில் பிச்சைக்காரர்கள் தொல்லை மிகக்குறைவு. தமிழக ஆலயங்களில் அவர்கள் யாத்திரீகர்களைச்சுற்றி வளைத்துக்கொள்வது சகஜமான காட்சி. கேரளத்தில் அவர்கள் மௌனமாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையும் மிகக் குறைவு. பிச்சை எடுப்பதிலும் தன்மான உணர்வு அங்கு தொனிப்பது சிறப்பு.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

## தலைநகரில் மீண்டும் . . .

இப்படியாக, இந்து இளைஞர் மன்றத்தினர் சமயப் பணியை விட சமுதாயப்பணிகளிலே கூடிய கவனமெடுத்து எமது சமுதாயத்தை மென்மேலும் மிளிரச் செய்ய தம்மால் இயன்ற சகலதையும் செய்ய தயங்கக் கூடாது.

இந்து இளைஞர் மன்றத்தினர் எதிலும் சளைத்தவர்கள் அல்ல. என்பதனை அவர்களது ஆரம்ப சமயப்பணியான ஆடிவேல் வரவேற்பு விழா கோடிட்டுக் காட்டுகிறது. குறுகிய காலத்தில் இவர்கள் இந்த விழாவை ஏற்பாடு செய்து நிறைவேற்றியதை எவராலும் பாராட்டாமல் இருக்கமுடியாது.

ஆடிவேல் முருகனின் அருட்கடாட்சத்துடன் ஆரம்பித்த இம்மன்றத்தினரின் பணி, தொடர்ந்து நல்ல முறையில் நம் மக்கள் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!



# ஆலயம்



ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா

சமயம் கோவில் குளங்களெல்லாம் வேண்டாம். இதெல்லாம் மக்களைச் சுரண்டி வாழ்வதற்கு ஒரு சில பிற்போக்குவாதிகளால் செய்துவைத்த சூழ்ச்சிகள். சமூக முன்னேற்றத்திற்குச் சமயம் பெரும் இடைஞ்சலாக இருக்கின்றபடியால் இந்தச் சமயக் குப்பையிலிருந்து மக்களை விடுதலை செய்யவேண்டும். இவ்விதமெல்லாம் ஜடவாதம் செய்யும் காட்சிகளின் செல்வாக்குப் பெருகி வருகின்றது.

> ''ஈசனுக் கன்பில்லார் அடியவர்க்குமன் பில்லால்
> எவ்வுயிருக்கு மன்பில்லார் தமக்கு மன்பில்லார்''

என்ற சிவஞான சித்தியாரின் பாடலின் கருத்தை உணராதவர்களின் சகோதரத்துவம், சமத்துவம், சமதர்மம், பஞ்சசீலம், முதலியன என்னிலைப்பட்டதோ? இன்னும் சில கோஷ்டிகள் ஆலய சீர்திருத்தத்தின் பெயரால் என்னென்னவோ சொல்லிக்கொண்டு இருக்கின்ற ஆசாரத்தையும் கெடுத்து அனாச்சாரத்தைப் புகுத்தப் பார்க்கின்றது. நட்டகல்லும் பேசுமோ என்ற கூற்றின் உட்பொருள் தெரியாமல் வாசாஞானம் பேசி ஆலயம் புகாமல் கற்பனா உலகில் பிராணத்தியாகம் செய்கின்றவர்களைப்பற்றி என்னவென்று சொல்வது. இன்னொரு சாரார் மதம் மயக்கும் மருந்தென்று சமயத்துக்கு ஒரு பரிபாஷை செய்திருக்கின்றனர். சமயத்துறையில் மதத்திற்குத் 'தர்சனம்' என்று சொல்லுவதுண்டு. தர்சனம் என்றால் பார்க்கப்படுவது என்று பொருள். உள்ளதை உள்ளபடி பார்த்தறிவது சமயம் யதார்த்தத்தை அறிவதே அறிவு. மற்றையவையெல்லாம் பொய்யறிவு. நமக்கு வரும் சங்கடமெல்லாம் பொய்யறிவின் விளைவு. எனவே மயக்கந் தெளிந்து உள்ளதை உள்ளபடி அறிய உதவுவது ஏதோ அது மதமெனப்படும். சிலர் பக்தியானது பயத்தினால் பிறந்த ஒரு மனக் கோளாறு என்று முடிவுகட்டி பக்தியின் ஆராய்ச்சியை அத்துடன் நிறுத்திவிட்டனர். பயத்தினால் உலக மகா யுத்தம் மூளுவதை விட இறை அச்சத்தினால் பக்தி பிறந்து அன்பினால் பிணைக்கப்பட்ட ஏக சமூக வாழ்வு உத்தமமானதன்றோ? ''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்'' என்று பக்தி பெருகிப் பயமற்ற பெரியாராகிய நாவுக்கரசர் பாடியிருப்பது அவர்களுக்குத் தெரியவில்லைப் போலும். பக்தி பிறந்தால் பயம் பிரியுமென்ற தத்துவம் நவீன உள நூல் ஆராய்ச்சியாளர்களின் புத்திக்கு அகப்படுமோ என்பது சந்தேகம். அச்சமும் பயமுமற்ற அன்னியோன்னிய அன்புடன் சேர்ந்து வாழும் சாந்தமான ஒரு சூழ்நிலையையே இன்றைய உலக மக்கள் வேண்டிநிற்கின்றனர். உலக சமாதானத்திற்காக ஏதோ சிலதெல்லாம் சொல்லியும் செய்தும் மூச்சுத் திணறி அவஸ்தைப்படுகிறவர்களெல்லாம் பக்தியின் சிறப்பையுணர்ந்து, அதை ஒரு சிறுதளவாவது உட்கொண்டால் போதுமானது சுவாசம் ஒழுங்காயோடும். மனம் தெளிவடைந்து சாந்தி பிறக்கும். பஞ்சசீலம் விளங்காதவர்கட்கெல்லாம் சீலமும் நோன்பும் தானே வரும், பக்தி இருக்கின்ற உள்ளத்தில் எல்லோரும் இறைவன் குழந்தைகள். சிருஷ்டிகளெல்லாம் அவனுடைமை என்ற சிருஷ்டி தத்துவம் விளங்கும். சண்டை சச்சரவுகள் குறையும். உனது எனது என்ற மமதை அடங்கும். யுத்த முஸ்தீபுகளுக்கு விரயமாகும் பொருளும் பணமும் மக்கள் க்ஷேமத்திற்காகப் பயன்படும். எனவே அச்சமகற்றி ஏகத்துவம் சகோதரத்துவம் சமத்துவம் முதலிய சமரச உணர்ச்சிகளுக்கு ஆதாரமான பக்தியை வளர்க்கும் ஆலயங்களைச் சம்ரட்சணை செய்வோம்.

நாம் வாழும் யுகத்திற்குக் கலியுகமென்று பெயர் சொல்கிறோம். கலியுகம் என்றால் இலகுவில் உணர்ச்சி வசப்படும் காலகட்டம் என்று பொருள்படும். அர்ப்ப காரியங்களுக்கும் உணர்ச்சி வசப்பட்டுத் தற்கொலை புரிபவர்களின் எண்ணிக்கையை எடுத்துப் பார்த்தால் கலி என்ற சொல் எவ்வளவு பொருத்தமான சொல்லென்பது தெரியும். கலியுக வரதனை நெஞ்சிலூன்றி நினைப்பவர்களுக்கு மனதில் கொண்ட கலியுங் கிலியுங் போய் அமைதி நிலவும் பாவ சிந்தனை வராது ஜென்மம் கடைத்தேற வேண்டுமென்று நினைப்பவர்க்கெல்லாம் கலியுகம் சிறப்புடையது அதிலும் திராவிடர்களுக்கு இன்னும் விசேஷம். முன் ஆரியர் வர்த்தம் (விந்திய மலையிலிருந்து வடக்கே இமயம் வரையில்) பக்திக்கும் புண்ணியத்திற்கும் சிரேஷ்டமானதென்று கருதியிருந்தது. கலியுக பகவான் வளர வளர ஆரியா வர்த்தத்திலிருந்த பக்தியும் புண்ணியமும், ஏனைய சிறப்புகளும் தெற்கே நோக்கி (விந்தியத்திற்குத் தெற்கே) வருமென்று சாஸ்திரங்கள் பல கூறுகின்றன நாநூறு வருடங்களுக்கு முன் திராவிட நாட்டில் தோன்றிய ஒரு பரம ஞானியால் தீர்க்க தரிசனமாகச் சொல்லி வைத்ததின் ஒரு சிறு பகுதியை இங்கு கூறுகின்றோம்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## ஆலயம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

''த்ர மிள புவி ததோ
பூரி சஸ்த்தத்திர சோச்சை
காவேரிம் தாமிர பர்ண்ணீமனுகில கிருதமா
லாஞ்ச புண்ணியாம் ப்ரதீசிம்'' [நாராயணீயம்]

''த்ரமிளபுவி'' யென்றால் திராவிட பூமியென்று பொருள் மற்றும் சுலோகத்தின் சாரம் மேலே கூறப்பட்டிருக்கின்றது. உலக நெருக்கடி அதி உச்ச நிலையை அடையும்பொழுது திராவிடத்தில் (குறிப்பாகக் காவிரி நதியோரங்களில்) மகான்கள் தோன்றி உலகச் க்ஷேமத்தை உண்டுபண்ணுவர் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மனித நாகரீகம் முதல் முறையாகத் தோன்றிய பிரதேசமல்லவா? சிறப்பிக்கத்தானே செய்யும். ஆகையால் இனி நமது நாட்டில் சமய நெறி குன்றி பக்தி குறைந்து ஆலயங்கள் தகர்த்தெறியப்படுமென்று யாரும் ஐயம் கொள்ள வேண்டாம். திராவிடக் கலை, கலாசாரங்கள் புத்துயிர் பெற்று புது முறையில் விளங்கப்போகின்றது. அந்தரங்க சுத்தியுடன் இருக்கின்ற ஆலயங்களை நன்நெறி நின்று பரிபாலனம் செய்து வந்தால் போதும்.

அறம் வளரும் புண்ணியம் கூடும் நாடும் சிறக்கும். மற்ற யுகங்களில் கொடிய தவத்தினாலும் அடையமுடியா மேன்மைகளும் சித்தியும் கலியுகத்தில் ஜெபம், பஜனம், நாமார்ச்சனை, பக்திப் பாடல்கள் முதலிய சாதாரண சாதனையால் சித்திக்கும் என்று பாகவதம் முதலிய கிரந்தங்களில் சிறப்புற எழுதப்பட்டிருக்கின்றது. எனவே சீலமும் நோன்பும் இருக்கின்ற பக்த ஜனங்களுக்குக் கலியுகம் மோட்ச காலம் என்றே கருதலாம்.

விஞ்ஞான புத்தி பல அற்புத சாதனைகளைச் செய்து வருகிறது. உடல் வாழ்க்கையைக் கூடுதல் சௌகரியப்படுத்தல் பல நூதனப் பொருள்களையும் ஆக்கித் தந்திருக்கின்றது. அவையெல்லாம் பெருமையுடன் நினைவு கூரத்தக்கவை. அதிக வசதியைச் செய்வதில் மட்டும் புத்தியைச் செலுத்தினால் முடிவு சோகமும் துயரமுமென்பதைப் பாமர மக்கள் உணர இன்னும் பல்லாண்டுகள் செல்லலாம், ஞான, தரும, ஒழுக்க நெறி, சிந்தனைகளுக்கிடமில்லாத இன்றைய உலகாயதக் கல்வி நிலவியிருக்கும் வரையில் தேகத்தைக் கடந்த உன்னத சிந்தனைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைப்பது அரிது. சில பறவைகள், ஈக்கள், சில அணுப் பிரமாணமான நுண் சீவிகள் இன்னும் சில செடி கொடிகள் தங்கள் ஜீவனத்திற்காக, விளக்க முடியாத எத்தனையோ அற்புதச் செய்கைகள் செய்கின்றன. அவற்றின் அற்புதச் செய்கைகளை உன்னிக் கவனித்தால் அறிவியல்களின் அகந்தை தானே அடங்கும். பகுத்தறிவில்லாத பிராணிகளும் அது இருக்கின்ற மனிதனும் செய்யும் நூதன நுட்பங்களெல்லாம் வெறும் உடல் வாழ்க்கையை மாத்திரம் வசதிப்படுத்துவதற்கென்றால் அவைக்கும் நமக்கும் பெரிய வித்தியாசம் ஏதும் இருப்பதாய்க் கூறுவதற்கில்லை. மனிதனை விட மிருக சாதிகளுக்கிடையில் நோயும் பிணியும் சண்டை சச்சரவும் குறைவு. வஞ்சனை, போட்டி, பொறாமையும் நம்மைவிட விலங்கினத்தில் அதிகமாய் இருப்பதாகத் தெரியவில்லை. இதனால் மனிதனைவிட மற்ற ஜெந்துக்கள் மேலானதென்று கருதலாமா? சகல பிராணிகளையும்விட மனித ஜென்மம் சிரேஷ்டமானதென்று சர்வ சம்மதமாயிருக்கின்றது. மனிதனில் இருக்கும் அந்த விசேஷம்தான் என்ன? இறை வழிபாடும் சமரச சிந்தனையும் மோட்ச விசாரமும் மிருக சாதிகளுக்கில்லை. புலன்களை அடக்கி வாழும் திறமையும் அவற்றிற்கில்லை. புலன்களைத் தன் வசப்படுத்தி நிறுத்தும் தனிச் சிறப்பியல்பு மனிதர்களுக்கில்லாவிட்டால் கண்டதே காட்சி கொண்டதே கோலம்; என்று கருதி அகப்பட்டதெல்லாம் தின்றும் குடித்தும் உயிரை மாய்க்கும் மிருக இயல்பில் நாங்களும் இருந்திருப்போம். மனித உருவில் இருந்தும் செயலில் இப்படி இருக்கின்றவர்களும் உண்டு. இறைவன் கருணையுள்ளம் அவர்கள்பால் வீசுவதாக.

ஜீவனின் தோற்றம், நிலை ஒடுக்கம் இவைகளைப் பற்றி நவீன ஆராய்ச்சியாளர்கள் ஏகோபித்த முடிவிற்கு இன்னும் வரவில்லை ஆரம்பத்திலேயே அவர்களுக்கிடையில் கருத்து வேற்றுமைகள் தாராளமாகவுண்டு. ஆய்வின் முடிவுகள் அடிக்கடி நெறி செய்தும் வருகின்றன நமது சமய சாஸ்திரங்கள் இவைகளுக்குத் தக்க பிரமாணங்களுடன் பூரண விளக்கம் தந்திருக்கின்றன. பரிணாமதத்துவத்தை அரை குறையாய்க் கிரகித்த ''டார்வினுக்கு'' நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன் பரிணாம வளர்ச்சியை அதன் முழு நிலையில் ரிஷிகளால் ஆராய்ந்து அறியப்பட்டிருக்கின்றது. சிவ புராணத்தில் மணிவாசகப் பெருமான் பரிணாம தத்துவத்தைச் சுருக்கமாகப் பாடிவைத்தார். அதிகம் சொல்லுவானேன் இந்து மதம் ஒரு பூரண பரிணாம சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு பிரபஞ்ச தத்துவத்தை விளக்கி மனிதன் பூரணத்துவமடையும் வழிவகைகளை வகுத்துத் தந்திருக்கின்றது. இதைப்பற்றி இங்கு ஈண்டு ஆராயப்பட வேண்டியதில்லை. பதஞ்சலியோக சூத்திரத்தை சுதேச புத்தியுடன் ஆராய்ந்தால் அணுவின் நுட்பங்களும் பரிணாம இரகசியங்களும், தக்க சான்றுகளுடன் சாஸ்திர ரீதியாய் விளக்கப்பட்டிருப்பதை அறியலாம். மனிதன் பரிணாம வளர்ச்சியின் முழுமையன்று. அவன் இன்னும் வளரவேண்டியிருக்கின்றது உருவிலன்று உள்ளத்தால், புத்தியால் எனினும் மனித உருவில் வைத்தே அது முழுமை அடைய வேண்டியிருக்கின்றது.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

# யாழோசை

— பேராசிரியர்: க. கணபதிப்பிள்ளை —

முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டினை ஒட்டி நாடளாவிய ரீதியில் பல்வேறு விழாக்களும், செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. அடிகளாரின் அளப்பரும் பணிகளை நினைவுகூரும் முகமாக அடிகளார் படிவமலர் என்னும் நூலிலிருந்து (வெளியீடு — சிலை நிறுவனக் குழுவினர் — காரைதீவு — 1969) பேராசிரியர்: க. கணபதிப் பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரையை மீள் பிரசுரம் செய்கின்றோம்.

பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் தமிழ் மொழிக்கு ஆக்கம் தந்த பெரியார்கள் மிகச் சிலரே. அவருள் ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, மறைமலையடிகள் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். நாவலர் அவர்கள் சைவசமயக் கல்விக்கும் சைவப்பண்பாட்டிற்கும் புத்துயிர் அளித்தார். தாமோதரம்பிள்ளை அவர்கள் சங்கநூல்களையும் பழைய இலக்கணங்களையும் துருவியாராய்ந்து அச்சுவாகனமேற்றித் தமிழரின் பண்டைப் பெருமைகளையும், சீரிய பண்பாடுகளையும் உலகோர் அறிய வைத்தார். மறைமலையடிகள் வருமொழியின்றித் தமிழ் தனித்தியங்காது என்னும் வெற்றெண்ணத்தைத் தகர்த்தெறிந்து, அதற்குப் பண்டைத் தூய்மையைத் தேடிக் கொடுத்தார். விபுலானந்த அடிகளாரும் வடநாட்டுப் பண்பாடு முதலியவற்றால் அழிந்தொழிந்துபோன தமிழிசையையும் தமிழிசைக் கருவிகளையும் தமது ஆராய்ச்சியின் திறனால் திரும்பவும் எடுத்துத் தமிழ் மக்களுக்கு அளித்துப் பெரும் புகழீட்டினார். தன்னலங்கருதாத இப்பெரியாரின் ஓயா உழைப்பினால் தமிழ்த்தாய் இன்று உலகினர் போற்றவும் தமிழ் மக்கள் சூழ்ந்து நின்று ஏற்றிப் புகழவும் அரியாசனத்தில் வீற்றிருக்கின்றாள்.

அடிகளார் சங்க நூல்களைக் கற்றுத் தெளிந்த பேரறிஞன் தமிழிலக்கணங்களை ஆராய்ந்தறிந்த பேரறிஞன். உரை நடை எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்; சிறந்த கவிபுனையும் போராற்றல் மிக்கவர் அன்றியும், தாம் ஆங்கில மொழி மூலம் கற்றறிந்த பூதநூல், வேதிநூல் முதலியவற்றின் நுண்பொருள்களைக் கற்றோரும் மற்றோரும் எளிதில் அறியக்கூடிய வண்ணம் தூயதமிழில் எடுத்து விளக்குவதில் வல்லுநர், பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களையும் இலக்கியங்களையும் தமிழ் மொழியில் பெயர்த்துத் தமிழுக்கு ஆக்கம் தேடித்தந்த பெரும் பேரறிஞர். இத்தகைய பேரறிஞர் தமிழ் மொழிக்குத் தாமே தொண்டு செய்வதோடு அமையாது வேறு பல அறிஞரையும் ஊக்குவிக்கும் பெருங்குணம் படைத்தவர். புத்தம் புதிய நூல்கள் பல தமிழ் மொழியில் எழுதல் வேண்டும் என்பதே அடிகளாரின் பேரவா. அதற்காகத் தம்மாலியன்றனவற்றை எல்லாம் செய்து வந்தார். நன்மாணாக்கர் பலரை நாடெங்கும் உருவாக்கினார் தாம் முயலும் துறைகளில் பணியாற்றும் புலவர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் ஊக்கமளித்தார். சுருங்கக் கூறின் தமிழ் மொழி மேலோங்க வேண்டுமென்று தம்முள்ளத்தில் கிடந்த பேருணர்ச்சியைத் தம் சுற்றாடலில் வந்தடைந்த எவருக்கும் அள்ளியிறைத்தார். அடிகளாரின் உணர்ச்சி வேகம் வந்தடைந்த எவரையும் அவர்பால் இழுத்தது. தமிழ்த் தொண்டில் ஈடுபடச் செய்தது. அடிகளார் தம் வாழ்க்கையில் முன்னேற்றமான கொள்கையுடனேயே வாழ்ந்தார்.

சமயத்துறையில் பழைய வேதாந்தத்தை கடைப்பிடித்தவர் அல்லர், காலத்துக்கேற்றவாறு சமய ஆசாரங்களைத் திருத்தி அமைக்கவேண்டும் என்னும் எண்ணக் கருத்துடையவர். தமிழ் மொழியைப் பொறுத்தவரையிலும் மிகுந்த முன்னேற்றமான குறிக்கோளையுடையவர். அடிகளார் 1931ம் ஆண்டு ஆனி மாதம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்கு பேராசிரியராகப் போய் இருந்தபொழுது அவர் ஆற்றிய அரும்பணி ஒன்றினை நாம் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கின்றது.

### பாரதியார் பாடல்கள்

சுப்பிரமணிய பாரதியார் எழுதிய பாட்டுக்கள் யாவும் மிகுந்த உணர்ச்சியுடன் முன்னேற்றமான கருத்துக்களைப் பொதிந்துள்ளனவாய் இருந்தாலும் இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்த பண்டிதர்கள் அவை பழைய யாப்பமைதியோடும் தமிழ் மரபோடும் முற்றப் பொருந்தாமையின்' உண்மையான தமிழ்க்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## யாழோசை

(முன்பக்கத் தொடர்ச்சி)

கவிதைகளல்ல, என வெறுத்தனர். அப்பாடல்களுக்குரிய மேலான சிறப்பையும் கொடுக்க மறுத்தனர். ஆனால் அடிகளார் அண்ணாமலை நகர் அடைந்த போது அங்கு பாரதிகழகம் என்ற ஒரு சங்கமுங் கூட்டி அப் பாட்டுக்களை இசையறிந்த புலவரைக் கொண்டு இசையுடன் பாடுவித்தார். அதன் பின்னரே பாரதியார் புகழும் பாட்டுக்களும் தமிழ்நாடெங்கணும் பரவின. தேடாதிருந்த பாரதியாரைத் தமிழுலகம் கனம் பண்ண வைத்த பெருமை விபுலானந்த அடிகளுக்கே உரியதாகும்.

அன்றியும், பாரதியார் தமது பாடல்களில் விளம்பியவாறு பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும் என்ற ஆசை பெரிதும் அடிகளுக்கு இருந்தது. அதனால் தம்மையடையும் விஞ்ஞானம் படித்த அறிஞரை ஆங்கிலம் கல்லாது தமிழ் மட்டுமே கற்று விஞ்ஞானக் கல்வியைத் தமிழில் மொழிபெயர்த்துச் சிறு சிறு நூல் வடிவமாகவோ கட்டுரை வாயிலாகவோ கொடுத்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்வார். ஆனால் விஞ்ஞானம் படித்த பெரும் புலவருக்கோ தமிழ் வராது. அதனால் அவர் படித்த படிப்பெல்லாம் தமிழ் மட்டு மறிந்த பொதுமக்களுக்குச் சிறிதும் பயன்படாதிருந்தது. அந்த நிலை இந்த நாளிலும் கூட மாறவில்லை. அடிகளார் இதனைப் பற்றி பேசும்பொழுது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் அமெரிக்க மிஷனரிமார் வைத்து நடத்திய செமினரியை எடுத்துக்காட்டாகப் பல முறையும் கூறுவர். அச்செமினரியில் படித்து வேலை செய்த பெரியோர்கள் கணிதநூல், வேதிநூல், பூதநூல், மருத்துவநூல், உடல்நூல் முதலிய மேனாட்டு விஞ்ஞான நூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டனர். அவ்வேலையை இடையிலே கைவிடாது யாழ்ப்பாணத்தவர் தொடர்ந்து ஆற்றியிருந்தால் தமிழ்மொழி விரைவாக முன்னேறியிருக்கும் ஒரு பெரிய தொண்டை யாழ்ப்பாணம் இத்துறையில் ஆற்றியிருக்கும்.

அடிகளாரும் ஏனையோரைப் போலவே ஆங்கிலம் மூலம் விஞ்ஞானம் கணிதம் முதலியவற்றைப் படித்துப் பட்டம் பெற்றவர். அதனாலே தாம் அறிந்த விஞ்ஞான அறிவைத் தமிழ்ப் பொதுமக்களுக்கு அளித்தல் வேண்டும் என்னும் பெரு விருப்புக் கொண்டார். வேதிநூலைப் பற்றியோ பூதநூலைப் பற்றியோ நூல்கள் வரைந்து கொள்ள அவருக்கு நேரமில்லாது போயிற்று. ஆனால் தம் விஞ்ஞான அறிவை வேறுவகையாகத் தமிழ் மக்களுக்கு அளித்தார்.

## கலைச்சொல்

1934ம் ஆண்டிலே சென்னை மாகாணத்திலுள்ள அறிஞர்கள் ஒன்றுகூடி மேலைநாட்டு விஞ்ஞானநூல் முதலியவற்றைத் தமிழில் ஆக்குவதற்காகச் சொல்லாக்கக் கழகம் ஒன்றைச் சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்திற் கூட்டினர். அம்மாநாட்டிற்குப் பொதுத்தலைவராக அடிகளாரையே தேர்ந்தெடுத்தனர். இம்மாநாட்டில் பயனாக எழுந்ததே சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கம் வெளியிட்ட கலைச்சொற்கள் என்னும் அகராதி நூலாகும். இந்நூலிற் காணப்படும் கலைச்சொற்களை கையாண்டே அறிஞர்கள் இப்போது தமிழ் நாட்டில் வேதிநூல் கணிதம், அரசியல் முதலியவற்றை எழுதுகின்றனர். இவ்வாறு அடிகளார் தொடங்கி வைத்த நன்முயற்சியால் விஞ்ஞானக்கலை இன்று தமிழில் விரைவாக வளர்ந்து வருகின்றது. தமிழ்நாட்டிலே எத்தனையோ பெரும் மேதாவிகள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். தாம் பிறந்த நாட்டிற்கும் மொழிக்கும் தம்மால் இயன்றவாறு அரும் பெரும் தொண்டுகளைச் செய்திருக்கின்றனர். தமிழ்மொழி மூலமாக உலகுக்குத் தொண்டு செய்த பெரியார்களுள் வள்ளுவர், இளங்கோ சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர். இப்பெரியார் யாவரும் தமது எண்ணக் கருத்துக்களைத் தமிழ்மொழி மூலம் உலகிற்கு அளித்தனர். ஆனால் இவர்களைப் போன்ற உயர்ந்த எத்தனையோ பல தமிழர்கள் தமிழ்நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் ஆதிசங்கராச்சாரியார், ராமானுசர் முதலியோர் முதன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் யாவரும் தமிழர் தமிழையே பேசினார்கள் எனினும் உயர்ந்த கருத்துக்கள் பொருந்திய நூல்களைத் தமிழில் எழுதாது வடமொழியில் எழுதி வைத்தனர். அதனால் வடமொழி சிறப்படைந்தது. ஆனால் அந்நூல்கள் தமிழில் எழுதப்பட்டிருந்தால் தமிழ்மொழி எத்துணை சிறப்படைந்திருக்கும்.

ஏன் இவர்கள் தமிழில் எழுதவில்லை தாம் இவற்றைத் தமிழில் எழுதினால் தமிழ் நாட்டவர் மட்டுமே படிப்பர். ஆனால் வடமொழியில் எழுதினால் இந்தியாவிலுள்ளார் யாவரும் படித்தறிவர் என்ற எண்ணத்தினாலேயே இவ்வாறு செய்தனர். மேலான எண்ணங்கள் பொதிந்த நூல்கள் எந்த மொழியில் எழுதினாற்தான் என்ன? அவை மொழி என்னும் போர்வையை நீக்கிக்கொண்டு வெளியாய் எவருக்கும் முன்னின்று விளங்கிக்கொண்டிருக்கும். இது அந்தக் காலத்தில், இப்பொழுதும் விஞ்ஞானம் முதலிய அறிவைப் பெற்ற எத்தனையோ தமிழர் தமிழில் எழுதினால் அவர் பெருமை உலகுக்கு வெளிவராதாம். அதனா

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

"மருள் நீங்கிய மாசறு காட்சி"

# ஒரு முனிவரின் வைராக்கியம்

தென்கச்சி சுவாமிநாதன்

ஒரு மரத்தடியில் ஒரு முனிவர் அமர்ந்திருந்தார்.

அவர் ஓர் ஊசியில் நூலைக் கோர்த்து தன் வேட்டியில் இருந்த ஒரு கிழிசலைத் தைத்துக்கொண்டிருந்தார்.

அவன் கைதான் அந்தக் கடமையை செய்து கொண்டிருந்தது. ஆனால் அவர் மனமோ கடவுளை நினைத்துக்கொண்டிருந்தது.

அப்போது அந்த சமயத்தில் பார்வதியும் பரமசிவனும் ஆகாய வீதியில் வந்துகொண்டிருந்தார்கள்.

மரத்தடியில் ஒளிப்பிழம்பாக அமர்ந்திருந்த முனிவரை ஜகன்மாதாவாகிய பார்வதி பார்த்தாள்.

அவள் பரமசிவனிடம், ''அங்கே மரத்தடியில் பார்த்தீர்களா?'' என்று கேட்டாள்.

''பார்த்தேன்!'' என்றார் அவர்.

''பிறகு என்ன? அவரைப் பார்த்த பிறகும் நாம் சும்மா போனால் எப்படி? வாருங்கள்! அங்கே சென்று அவருக்கு ஏதாவது வரம் கொடுக்கலாம்'' என்றாள் அன்னை.

பரமசிவனின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

''அந்த முனிவரைப் பற்றி நீ லேசாக நினைத்து விடாதே! அவர் அந்த நிலைகளை எல்லாம் கடந்தவர். இப்போது நாம் அவரிடம் செல்வது வீண் வேலை. எனவே அவரிடம் போக வேண்டாம்; வா! நாம் நம் வழியில் போவோம்!'' என்றார் சிவபெருமான்.

ஜகத்பிதா இவ்வாறு கூறினாலும் ஜகன்மாதா அவரை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்துச் சென்றாள்.

முனிவர் நிமிர்ந்துபார்த்தார். ''அடடே! அம்மையும் அப்பனுமா! வாருங்கள்!'' என்று சொல்லி அன்புடன் வரவேற்றார்,

இருவருக்கும் குடிப்பதற்கு மோர் கொடுத்தார் முனிவர். அவ்வளவுதான்! அதைக் கொடுத்துவிட்டு அவர் தன் பாட்டுக்கு முன்புபோலவே துணிக் கிழிசலைத் தைக்க ஆரம்பித்தார்.

பரமசிவனும் பார்வதியும் சிறிது நேரம் பொறுமையுடன் அவருக்காகக் காத்திருந்திருந்து பார்த்தார்கள். அவர்களை நிமிர்ந்து பார்க்கும் வழியைக் காணோம்! அவர்கள் இருப்பதை அவர் கண்டு கொள்ளவே இல்லை!!

''சரி, நாங்கள் புறப்படுகிறோம்!'' என்று அம்மையும் அப்பனும் குரல் கொடுத்தார்கள்.

அதற்கு, ''ரொம்ப சந்தோஷம். போய் வாருங்கள்! வணக்கம்'' என்றார் முனிவர்.

அப்படி அவர் சொல்லிவிட்டு மீண்டும் துணியைத் தைக்க ஆரம்பித்தார்.

பார்வதி, பரமசிவனிடம் 'ஏதாவது கேளுங்கள்!' என்பதுபோல் சைகை செய்தாள்.

அவரும் அதைப் புரிந்துகொண்டு முனிவரைப் பார்த்து, ''தவச்செல்வரே! நாங்கள் ஒருவருக்குத் தரிசனம் கொடுத்தால், அவருக்கு ஏதாவது வரம் கொடுத்துவிட்டுப் போவதுதான் வழக்கம். ஆகவே உங்களுக்கும் ஏதாவது வரம்...!'' என்று சொல்லி இழுத்தார்.

முனிவர் லேசாக சிரித்தார்: ''வரமா? உங்கள் தரிசனத்தை விடவா? அதெல்லாம் இந்தக் கட்டைக்கு ஒன்றும் வேண்டாம். நீங்கள் உங்கள் வழியைத் தொடருங்கள்!'' — என்று சொல்லிவிட்டு அவர் மறுபடியும் துணிக்கிழிசலைத் தைக்க ஆரம்பித்தார்.

இருந்தாலும் பார்வதியும் பரமசிவனும் அவரை விடுவதாக இல்லை.

''ஏதாவது வரம் கொடுக்காமல் நாங்கள் இங்கிருந்து போகமாட்டோம்!'' என்று உறுதியாக சொல்லிவிட்டார்கள்.

முனிவர் பார்த்தார்: 'சரி அப்படி கட்டாயமாக ஏதாவது வரம் கொடுத்துவிட்டுத்தான் போக வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் ஒன்று செய்யுங்கள்; இந்த ஊசிக்குப் பின்னாலேயே இந்த நூல் போவதற்கு வரம் கொடுங்கள்!'' என்றார்.

இதைக் கேட்டதும் பார்வதி பரமேசுவரர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## ஒரு முனிவரின்.....

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஆதலால் அவர்கள், "ஏற்கனவேதான் இந்த ஊசிக்குப் பின்னால் இந்த நூல் போய்க்கொண்டிருக்கிறதே! இதற்கு நாங்கள் ஏன் வரம் கொடுக்க வேண்டும்?" என்று வினவினார்கள்.

"அதையேதான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் நடந்துகொண்டு வந்தால், வர வேண்டிய பலன் நியதிப்படி தானாகவே பின்னால் வருமே! நடுவில் நீங்கள் ஏன் எனக்கு வரம் கொடுக்க வேண்டும்?" என்று கேட்டார் முனிவர்.

இதைக் கேட்டதும் பரமசிவனும் பார்வதியும் சிரித்துக்கொண்டே தங்கள் வழியே சென்றார்கள்.

இந்த முனிவர் எய்திய காட்சிக்குப் பேர்தான் 'மருள் நீங்கிய மாசறு காட்சி' என்கிறார் நினைவுக் கலை ஏந்தல் — தசாவதானி — திருக்குறள் ராமையா அவர்கள். முப்பது வயதில் பார்வையை இழந்த அவர் திருக்குறள் ஒளியைத் துணையாகக் கொண்டவர். நம் காலத்தில் வாழ்ந்தவர்,

"இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

என்ற குறளில் வரும் 'மருள் நீங்கிய மாசறு காட்சி' என்றால் என்ன என்பதை விளக்குவதற்காக அவர் இந்தக் கதையை சொல்லியிருக்கிறார்.

"மனதை தூய்மைப்படுத்த தவறியவன் இறைவனை நம்பியும் பயனில்லை. இறைவனை நம்பாமல் இருந்தும் பயனில்லை" என்கிறார் அவர்.

---

மேலே சொல்லப்பட்ட கதையில் வரும் முனிவர் வேண்டுதல், வேண்டாமை என்ற நிலைகளைக் கடந்தவர்; எதையும் எவரிடமிருந்தும் எதிர்பார்க்காதவர். இப்படிப்பட்டவர்கள், முன்வினை எனப்படும் பிராரப்த கர்மம் காரணமாக உலகில் தங்களுக்கு வாய்த்த கடமைகளைச் செய்துகொண்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் மனம் மட்டும் எப்போதும் பரமாத்மாவிடம் லயித்து ஒன்றியிருக்கும்.

ஆகவே, எந்த ஆசையும் இல்லாதவர்களுக்கு எந்தத் தேவையும் இல்லை என்பதை முனிவரின் இந்தக் கதையின் மூலம் அறிகிறோம்.

நன்றி: மீள் பிரசுரம்
இராமகிருஷ்ண விஜயம்

# ஏத்துக பொன்னடி

### நிலைமண்டில ஆசிரியப்பா

எழுக புலருமுன் ஏத்துக பொன்னடி
தொழுது வணங்குக தூநீ றணிக
பழுதிலைந் தெழுத்தும் பன்னுக பன்முறை
அழுது புலம்புக வாய்விட் டரற்றுக
அன்னை பிதாவின் அடியிணை வணங்குக
தன்னைப் போலச் சகலமும் ஓம்புக
விண்ணைப் போல வியாபகம் ஆகுக
கண்ணைப் போலக் காக்க அறத்தை
செய்வன எல்லாஞ் செவ்வனே செய்க
கையும் மெய்யும் கருத்திற் கிசைக
அழுக்காறு கோபம் அவாஅ ஒழிக்க
விழுப்பம் மிக்க மேன்மக்க டம்மை
ஒருபோதும் மறவா துறவு கொள்ளுக
கருவினில் வாராக் காரணங் காண்க
தன்னை அறிக தானே ஆகுக
மின்னை ஒத்த வாழ்வை வெறுக்க
வறுமை வந்துழி மனந்தள ரற்க
மறுமை இன்பம் மறவாது நாடுக
அடியார் தங்கள் அடியிணை மலர்க்கீழ்
குடியாய் வாழுக குறைவெலாந் தீர்க
ஈசன் அடியிணை ஏத்தி ஏத்தி
வாச மலர்கொடு வாழ்த்தி வாழ்த்தி
மத்தன் இவனென மண்ணவர் பேசவும்
சித்தன் இவனெனத் தேவர்கொண் டாடவும்
இவ்வண்ணம்,
ஒத்தன ஒத்தன ஊரவர் பேசிடச்
சித்தந் தெளிந்து சிவாய நமவென
நின்று மிருந்துங் கிடந்தும் நினைந்து
பொன்றும் உடலைப் போற்றுதல் ஒழிந்து
நன்மை தீமை நாடா தொருவி
அன்னை போல அன்பிற் சிறந்து
பின்னை ஒன்றும் பேசா தடங்கி
என்றும் வாழ்ந்தினி திருத்தல் இன்பமே.

---

ஒவ்வொரு மரணமும் மனிதர்களுக்கு எத்தனையோ பாடங்களைக் கற்றுத் தருகிறது. ஆனால் மனிதர்களோ கற்ற உடனேயே அவற்றை மறந்துவிடுகிறார்கள்.

— கண்ணதாசன்

## யாழோசை...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

லேயே அவர் ஆங்கிலத்தில் எழுத முன்வந்துள்ளனர். இப்பெரியாரின் அறிவு தமிழுக்குப் பயன்படாமற் போகின்றது. தாம் கற்றவற்றைத் தமிழில் எழுதித் தமிழருக்கு அளிக்குமாறு விஞ்ஞானத்தில் வல்ல பெரியார்களை அடிகள் பலமுறையும் வேண்டினர். அக்காலத்தில் அவருரை வெற்றுரை ஆயிற்று. அவர் கூறியவற்றை பொருட்படுத்தினார் ஒருவருமிலர். ஆங்கிலேயர் ஆட்சி நீங்கியதும் காலம் மாறியது இன்று தமிழ் மொழியிலே விஞ்ஞானம் வேண்டும் கலைகள் வேண்டும் என்ற ஒன்றே கூக்குரல். இனி மேலாவது அடிகள் கண்ட கனவு நனவாகுமா?

### தமிழ்ப்பற்று

அடிகளார் தாம் கற்றறிந்த விஞ்ஞானப் பெரும் புலமையைக் கொண்டும் கணித அறிவைக் கொண்டும் பெரும் பெரும் ஆராய்ச்சிகளைச் செய்து ஆங்கிலத்தில் வெளியிட்டிருக்கலாம். ஆனால் அவருக்குத் தமிழ்மேல் இருந்த அன்பு வேறெங்கோ இழுத்தது. தமிழ்மொழியிலும் தமிழர் பண்பாட்டிலும் அவர் கருத்தைச் செலுத்தினார். சிலப்பதிகாரத்திலேயுள்ள அரங்கேற்ற காதையையே ஆராய்ந்தார். அதற்குள்ள அரும்பத உரையையும் அடியார்க்கு நல்லார் உரையையும் கற்றார். பண்டைத் தமிழர் மீட்டிய யாழிலே அவர் கவனம் சென்றது. மாதவியும் கோவலனும் கடற்கரைக் கானலில் இருந்து மாறி மாறி மீட்டிய யாழிசை அவர் உள்ளத்தை கவர்ந்தது திரும்பவும் அவ்வின்னிசையைத் தம் காதாற் பருக ஆசை கொண்டார். இவ்வாசை பல ஆண்டுகளாக அவரை உறுத்தியது. முற்றாகத் துறந்த துறவி என்றாலும் தமிழ் மேல் வைத்த ஆசை அவரை விட்டிலது.

அவர் தமக்கிருந்த பூதநூலறிவையும் கணிதநூலறிவையும் பயன்படுத்திப் பண்டையாழைத் திரும்பவும் அமைத்தனர். இவ்வியாழ் தமிழ் நாட்டிலே தோன்றி வளர்ந்த வரலாற்றை அவர் தமது யாழ் நூலில் மேல் வருமாறு எழுதியிருக்கின்றார்.

''சரித்திர கால எல்லைக்கெட்டாத காலத்திலே வில்யாழெனப் பெரிய குழவியாயுதித்து மழலைச் சொற் பேசி இடையர் இடைச்சியரை மகிழ்வித்து சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகி பாணனொடும் பாடினியொடும் நாடெங்கும் திரிந்து ஏழைகளும் இதயம் களிப்பெய்த இன்சொற் கூறிப் பின்பு பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்பைப்பருவமெய்திப் பெரும்பாணரோடு சென்று குறுநில மன்னரும், முடிமன்னரும், தமிழ்ப்புலவரும், கொடைவள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட உரைபகர்ந்து அதன்பின் மங்கைப் பருவமெய்தி அப்பருவத்திற்கேற்ப புதிய ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி மடந்தைப் பருவம் வந்து எய்தலும், திருநீலகண்ட பெரும்பாணரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து தெய்வ இசையினாலே அன்பருள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் வித்தகராற் பாராட்டப்பட்டு அரிவைப் பருவம் வந்து எய்துதலும் அரசிளங் குமரிகளுக்கு இன்னுயிர்ப்பாங்காகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்துச் சீரும் சிறப்பும் எய்தி இன்று யாம் என்னும் மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனாள்,''

மறைந்துபோன இந்த யாழும் அடிகளாரின் நன் முயற்சியினால் உயிர்பெற்றுப் பொலிவுடன் திகழுகின்றது.

---

பிரதிமேயர் கணேசலிங்கத்தின்

## ஒரு முன்மாதிரி

கடந்த 12-7-1992ல் கொழும்பில் ஆடிவேல்ரத பவனியை வரவேற்குமுகமாக, கொழும்பு இந்து இளைஞர் மன்றத்தினர் (வை. எம். எச். ஏ.) பம்பலப்பிட்டி லொறிஸ் வீதி சந்தியில் ஒரு பூஜை செய்ய ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கு முன்னோடியாக பம்பலப்பிட்டி பொலிஸில் ஏற்கனவே அறிவித்து சந்தியில் ஒரு பந்தலை அமைத்துக்கொண்டிருந்த வேளையில் நகர போக்குவரத்து பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்து அனுமதியில்லாது பந்தலை போடவிடாது தடுத்தனர். மன்றத்தின் பிரதிநிதிகளும் நகர போக்குவரத்து பொலிஸாருடன் கதைத்தும் எதுவித பலனும் ஏற்படாதபட்சத்தில் பம்பலபிட்டி பொலிஸில் சென்று முறையிட்டனர். ஆயினும் அங்கும் எதுவித பயனும் ஏற்படாதபட்சத்தில் அமைக்கப்பட்ட பந்தலை பொலிஸார் அகற்றி விட்டனர்.

மனம் தளர்ந்த இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதிகள், கொழும்பு மாநகர பிரதிமேயர் உயர்திரு கணேசலிங்கத்துடன் தொடர்புகொண்டனர். சில கணப்பொழுதில் அவ்விடத்திற்கு விரைந்த துணை மேயர் பொலிஸாருடன் கதைத்து அகற்றப்பட்ட பந்தலை மீண்டும் அதே இடத்திலே அமைத்துத் தந்து இளைஞர்களுக்கு உற்சாக உரமூட்டியமை இளைஞர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை அளித்தது.

இந்த நல்ல முயற்சிக்கு திரு. கணேசலிங்கம் தனது நேரத்தையும், சிரமத்தையும் பாராது உடனடியாக வருகை தந்து ஆவண செய்தமைக்கு இந்து இளைஞர்கள் மாத்திரமல்ல, இந்து சமுதாயமே அவருக்கு கடமைப்பட்டுள்ளது.

எல்லோருக்குமே இது ஒரு முன்மாதிரியே!

# ஆனி உத்திரம்

சிவநெறிச் செல்வர்: இரா. மயில்வாகனம்

சிவம் என்னும் நாமம் தமக்கேயுடைய செம் மேனி. எம்மானைப் பரம் பொருளாகக் கொண்டு வணங்கும் நெறியைச் சைவம் என்றும் சிவபரம் பொருளை வணங்குபவர்களை சைவர் என்றும் கூறும் வழக்கம் வெளிப்படையாக உள்ளது. உலகில் உள்ள சமயங்களிற் சைவ சமயமே மிகவும் பழமையானது. அது காலங்கடந்தது. இச்சமயத்தார் சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று கைதொழுவர். சைவ சமயிகளாகிய நாம் வருடத்தில் ஆனந்த மேலீட்டினால் கொண்டாட வேண்டியவற்றுள் ஆனி உத்திரமும் ஒன்றாகும் மார்கழி திருவாதிரை, வைகாசி விசாகம், திருக்கார்த்திகை போன்றவைகளும் இவ்வாறே இவ்வுத்திர நட்சத்திரத்தில் நடராஜப் பெருமானின் திருவுருவத்தை நினைக்கவேண்டும்

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய வெடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே

(கோயிற்புராணம்)

இத்திருவுருவுடைய சதாசிவன் திரு நிருத்தஞ் செய்கின்ற தில்லையையும் அதாவது கனகசபையையும் நினைக்கவேண்டும்.

''பூங்கமலத் தயனுமலர் புண்டரிகக் கண்ணானும்
தாங்குபல புவனமுமேற் சகலமுமாயகலாத
ஓங்குமொளி வெளியே நின்றுலகு தொழ நடமாடுந்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம்பலம் போற்றி.

இவை போன்ற பல பாடங்கள் உண்டு. கோயில் என்று கூறுவது தில்லையையே.

சிதம்பரம் என்னும் சொல்லை சித்+அம்பரம் எனப் பிரித்து அம்பரம் ஆகாயத்தைக் குறிப்பது என்று கொள்வர். ஆகவே ஆகாய வெளி பொருளாகும்

நடராஜப் பெருமானுக்கு ஒருவருடத்தில் விசேடமாக அபிசேகங்கள் நடைபெறுகின்றன மார்கழித் திங்களில் திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெறுவது மிகவும் விசேடமானது. மனிதனுக்கு ஒரு வருடங் கொண்டது தேவர்களுக்கு ஒருநாள். ஒருநாளில் வைகறை, காலை, உச்சி, மாலை, இரவு, அத்தயாமம் என அறுவகைய பொழுதுகள் உள்ளன.

தேவர்களின் நாளில் வைகறைக்குச் சமமானது மார்கழி, காலைச் சந்திக்கு சமமானது மாசி, உச்சிக் காலத்திற்கு சித்திரை மாலைக் காலத்திற்குச் சமமானது ஆனி, இரவுக்கு ஆவணி, அர்த்தயாமத்திற்கு புரட்டாதி இக்கால எல்லைகளைக் கொண்டு வருகின்றனவாய நட்சத்திரங்கள் அமைந்து அம்மலங்களோடிசைந்து, மார்கழி திருவாதிரை, மாசிமகம், சித்திரையில் சித்திரை, ஆனி உத்திரம், ஆவணி மூலம் புரட்டாதி ரேவதி பிதிர்மாதம் என்று பெரியோர்களின் தீர்மானப்படி விரதமிருந்து, ஆலய தரிசனம் செய்து, மனம் மகிழ்வார்கள் சைவமக்கள்.

ஆனிமாத உத்திர நட்சத்திரத்தன்று திருமஞ்சனம் நடைபெறும் சிறப்பால் ஆனி உத்திரம் எனப் பெயர் பெற்றது சில சிவாலயங்களில் ஆறுகாலப் பூசைகளும் நடைபெறும். இது ஆறு அபிசேடங்களும் பூசைகளும் கொண்டதாகும்.

நடராசப் பெருமானும் சிவகாமியம்மையாரும் மார்கழி, ஆனிமாத, மகோற்சப புண்ணிய காலங்களில் ரத உற்சவத்தன்றும் மறுநாள் தெரிசனத்தன்றுமே சிற்சபை விட்டெழுந்தருளிப் பத்தர்களுக்குக் காட்சியளிப்பர். இப்புண்ணிய தினங்களில் வந்தித்து வணங்கி அருள் பெறவேண்டும்.

இறைவனுக்கு நடராச வடிவமாகிய உருவத் திருமேனி உண்டென்று ஆகமப் பிரமாணத்தால் அறிகிறோம். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றும் ஒருசாரார் கூறி இறைவனுக்கு உருவம் உண்டானால் நாங்கள் காணவேண்டும். ஆனால் நாங்கள் காணவில்லையே என்கிறார்கள். சிதம்பரத்தில் ஆனந்த நடனஞ்செய்யும் திருவுருவத்தின் இயல்பை சமயக்குரவர்களும் சந்தான ஆசாரியர்களும் அழகுபட சொல்லியிருக்கிறார்கள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் ஐந்தொழில்களையும் செய்கின்ற நிலையில் தனிப் பரம்பொருளாகிய இறைவன்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## ஆனி உத்திரம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

முறையே பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்னும் ஐந்து மூர்த்திகளாக விளங்குவான். இவை ஐந்தும் சிவம், சத்தி, நாதம், விந்து என நான்கும் சேர்ந்து ஒன்பது வேற்றுமைகளாக நடிப்பவன் முழுமுதற் கடவுளாகிய முதல்வனே. இந்த ஆனி உத்திரத்தில் விசேடமாக கணிக்கப்படும் நடராசப் பெருமான் திருவருள் பாலிப்பான்.

சிவம் சக்தி நாதம் விந்து சதாசிவன் திகழு
மீதுன்
உவந்தருளுருத்திரனான் மாலயனொன்றி
னொன்றாய்ப்
பவந்தரு மருவ நாலிங் குருவரா லுபய
மொன்றாம்
நவந்தரு பேத மேக நாதனே நடிப்பனென்பர்.

இவை ஒன்றில் இருந்து ஒன்றாகத் தோன்றும் இஃதே தில்லைத் திருநடனம் இதைக்கண்டு களிக்க நாம் கொடுத்துவைக்க வேண்டும்.

எல்லா வாரங்களும் நல்ல வாரங்களே ஆனால் எல்லோர்க்கும் எல்லா வாரங்களிலும் விசேட வழிபாடு செய்ய முடியாதிருத்தல் கூடும் வருடத்தில் சில சுபதினங்களையாவது தெரிந்தெடுத்து வழிபாடு செய்ய முன்னுள்ள பெரியோர்கள் வழிவகுத்து வைத்துள்ளனர். அத்தினங்களில் வழிபடும் முறையையும் விரதமனுட்டித்தல் முதலிய கருமங்களில் உள்ள நுணுக்கங்களையும் அவற்றால் அடையும் பயன்களையும் பற்றி எல்லோரும் அறிந்திருக்கவேண்டும் அவற்றில் ஒன்றுதான் நாம் நினைவுகூரும் ஆனி உத்திரம். அவனன்றி ஓர் அணுவும் அசையாது இது உலகறிந்த உண்மை. பரமபதியாகிய இறைவனின் அருள்சக்தியால் ஐந்தொழில்களின் தலைவர்கள் ஐந்தொழில்களையும் நிறைவேற்றுவர். அவன் இயங்காவிட்டால் ஐந்தொழில்களும் நடைபெறாது. இத்தொழில்கள் நடைபெறுவதற்கு ஆனந்தமாய் நடராசப் பெருமானின் ஆட்டமே வேண்டப்படுகிறது. இதனையே திருமூல நாயனார்

''வேதங்களாட மிகு ஆகமமாடக்
கீதங்களாடக் கிளரண்டம் ஏழாவப்
பூதங்களாடப் புவன முழுதாட
நாதங் கொண்டாடினான் ஞானானந்தக்கூத்தே

என்று நயம்பாராட்டுகிறார்.

இவ்வுண்மையினை சகலராகிய எங்களால் சண்டறியக் கூடாது; நினைவுக்குமெட்டாது. சபையில் நடனம் புரிகின்ற பெருமானுக்கு உருவமும், உறுப்பும், கரணமும், பயனும், தொழிலும் அமைந்தது போலவே சிதாகாசமாகிய சபையில் நடனம் புரியும். இறைவனுக்கும் உணர்வு அற்ற பிரபஞ்சம் தூல உருவமாகவும், உணர்வு நிறைந்த பிரபஞ்சம் உறுப்புகளாகவும், இச்சை, ஞானக்கிரியைகள் கரணமாகவும் உயிர்களுக்கு அறிவினை ஆக்கிவைப்பது பயனாகவும் ஐந்தொழில் விரிவே தொழிலாகவும் அமைந்துள்ளது.

உலகமே உருவமாக யோகிகள் உறுப்பதாக இலகுபேரிச்சா ஞானக்கிரியையுள் கரணமாக அலகிலா உயிர்கட்கெல்லாம் அறிவினை ஆக்கி ஐந்து நலமிகு தொழில்களோடு நாடகம் நடிப்பான் நாதன். சிதம்பரரகசியம் என்று சொல்லும்போது சிதம்பரத்தில் சிற்சபையில் நடராச மூர்த்திக்கு வலப்பக்கத்தில் களங்கமில்லாத ஆகாசலிங்கம் திகழ்கின்றது. இதனையே சிதம்பர ரகசியம் என்பர். இது பெயர் உருவம் என்ற மாற்றங்கட்கு உட்படாதது. அதனால் அனைவரும் இலகுவில் வழிபடக்கூடும். இதனையே தாயுமான சுவாமிகள் பின்வருமாறு கூறுகிறார்.

சன்மார்க்க ஞானமதின் பொருளும்
வீறுசமய சங்கேதப் பொருளும் தானொன்
றாகப்
பன்மார்க்க நெறியும் கண்டதில்லை
பகர்வரிய தில்லைமன்றுள் பார்த்தபோதங்
கென்மார்க்க மிருக்கு தெல்லாம் வெளியே
யென்ன
எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பா
கன்மார்க்க நெஞ்சமுள தெனக்குத்தானே
கண்டவுட னானந்தம் காண்டலாரும்

காஞ்சியில் பூமி வடிவமாகவும், திருவானைக்காவில் நீர்வடிவமாகவும், திருவண்ணாமலையில் நெருப்பு வடிவமாகவும், திருக்காளத்தியில் காற்றுவடிவாயும், சூரிய விம்பத்தில் சூரியவடிவமாகவும் சோமநாதத்தில் சந்திரவடிவமாகவும் எல்லா உயிர்களிலும் பசுபதியாகவும் அமர்ந்த இறைவன் சிதம்பர ரகசியத்தில் ஆகாச மூர்த்தியாக விளங்குகிறான்.

நாம் வெறும் பொம்மைகள் கயிற்றை இயக்கி நம்மை ஆட்டுபவன் நடராசன். தில்லை திருநடனத்தைக் கண்ட கண்ணால் பின்னர் காண்பதற்கு தகுந்த பொருள் வேறு இல்லை. மைதீட்டிய கண்களையுடைய உமாதேவி கண்டு மகிழ்ந்து நிற்கின்றார். அம்மை இறைவன் ஆடும் அழகைப் பார்த்துவிட்டார். இறைவன் நடனக் கூத்தை, அதன் திறத்தை குமரகுருபரர் தமது கற்பனைச் சிறப்புக் கண்களால் கண்டு பின்வருமாறு கூறுகிறார்.

''ஆட்டுகின்றோரின்றி மன்று ளாடுமானந்தத்
தேன்
காட்டுகின்ற முக்கட் கரும்பொன்று—வேட்ட
தனை

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிறுகதை

# கலைமகள் கடாட்சம்

சோழ நாட்டில் ஒரு தெருவில் கவிஞர்கள், புலவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்கள் அன்றாடம் அரண்மனைக்குச் சென்று அரசவையில் அரசர் புகழ்பாடி பரிசுகள் பெற்று ஜீவித்து வந்தனர். அக்காலத்தில் அரசர் புகழ்பாடி வாழ்ந்துவந்த புலவர்களுள் இவர்களும் அடங்குவர்.

அத்தெருவில் சங்கீத ஞானமும், பாடும் புலமையும் அற்ற ஒருவர் வாழ்ந்து வந்தார். எல்லோரும் வயிரார சாப்பிடும்போது அவருடைய வீட்டில் மாத்திரம் அடுப்பில் பூனை குட்டிபோட்டது. அந்த அளவிற்கு வறுமை அவர்களை வாட்டியது.

அவருடைய மனைவி காலையும், மாலையும் அவரை திட்டிக்கொண்டே இருந்தாள் ஆனால் அவரோ ''சொரணை'' அற்றவர்போல் அமைதியாக வீட்டிலேயே முடங்கிக் கிடந்தார். ஒருநாள் அவருடைய மனைவி கடுங்கோபம் கொண்டு ''நீங்களும் ஓர் ஆண்பிள்ளைதானே. உங்களைப்போல் உள்ளவர்கள் எல்லாம் எப்படி அரசவைக்குச் சென்று புகழ்பாடி பேரும், புகழோடும் இருக்கின்றனர். நீங்களும் அரசவைக்குச் சென்று ஏதாவது ''கண்ணா பிண்ணா'' என்று பாடி பரிசுபெற்று வாருங்கள் இல்லாவிட்டால் வீட்டுக்குத் திரும்ப வேண்டாம்' என்று அவரை வீட்டைவிட்டு வெளியேற்றிவிட்டாள்.

அன்று ரோசமாக வீட்டைவிட்டு வெளியேறியவர் ஏதும் புரியாதவராக நடந்துகொண்டிருந்த போது உடனே அவருடைய மனைவி சொன்ன அந்த ''கண்ணா, பிண்ணா'' என்ற வார்த்தை அவரின் நினைவிற்கு வந்தது. உடனே அவர் ''கண்ணா, பிண்ணா'' என்று வழி நெடுகிலும் புலம்பிக் கொண்டே சென்றார்.

சிறிது தூரம் சென்றபோது ஓர் மரக்கிளையில் அமர்ந்திருந்த காகம் ''கா......கா.... கா......'' என்று கரைந்தது. அதை நிமிர்ந்து பார்த்தவர். ''ஓகோ... காகுரையோ'' என்று கேட்டுவிட்டு நடந்தார். நடந்தவர் மீண்டும் ''கண்ணா-பிண்ணா'' என்ற வரியை நினைவுபடுத்திக் கொண்டே சென்றதோடு நின்றுவிடாமல், இடையில் ''காகுரையோ'' என்ற வரியையும் இணைத்துக் கொண்டு ''கண்ணா-பிண்ணா, காகுரையோ'' என்று சொல்லிக்கொண்டே சென்றார்.

இன்னும் சற்று தூரம் கவலையோடு சென்று கொண்டிருக்கையில், குயில் ஒன்று மரக்கிளையில் இருந்து ''கூ ...கூ......கூ... '' என்று கூவியது. சற்று நின்று நிமிர்ந்து பார்த்தவர், குயிலைப்பார்த்து ''ஓகோ கூகுரையோ'' என்று கேட்டுவிட்டு அங்கிருந்து சென்றார்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## ஆனி உத்திரம்

(முன்பக்கத் தொடர்ச்சி)

உற்று நெடுநாளாக உண்ணுமேன் மால்யானை
பெற்றதொடு கூந்தற் பிடி.''

ஒரு கரும்புத் தோட்டத்தில் கரும்பு ஆட்டுவாரின்றி ஆடுகின்றது. ஓரானையைப் பெற்ற பிடிஒன்று நெடுநாளாக உண்டு களிக்கிறது.

இவ்வாறாய திருநடனத்தின் முடிவுதானென்னே என்ற வினாவுக்கு இதைத் திருமூலர்,

''ஆனத்திலாடிப் பின்னவக் கூத்தாடிக்
கானத்திலாடிக் கருத்தில் தரித்தாடி
முனச் சுழுனையுள் ஆடிமுடிவில்லா
ஞானத்துள் ஆடி முடித்தான் என்நாதனே.''

என்று விடை இறுக்கிறார்.

இவ்வாறாக ஆனி உத்திரத்தில் ஆடும் நடராசப் பெருமானைக் கண்டு களித்த அம்மையாரின் விழியின் வியப்பையும் குமரகுருபரர் விட்டுவைக்கவில்லை.

''பொன்மன்றம் பொற்றமரையொக்கு மம்மன்றிற்
செம்மறிருமேனி தேனொக்கு மத்தேனை
உண்டு களிக்குங் களிவண்டையொக்குமே
எம்பெருமாட்டி விழி

என்று கற்பனைக் கண்களால் காண்கிறார்.

''வாழி திருமன்றங் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ்கேட்ட வார்செவிகள்
வாழியவனை வணங்கு முடிச்சென்னி
வாழியவன் சீர்பாடும் வாய்

திருச்சிற்றம்பலம்

## கலைமகள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

இப்போது காலையில் புறப்பட்டபோதிலிருந்து தனக்கு ஏற்பட்ட அனுபவங்களை ஒருதரம் மனத் திரையில் நினைவுப்படுத்திப் பார்த்தார். ''கண்ணா பிண்ணா, காகுரையோ, கூகுரையோ'' என்று நினைத்துக்கொண்டு சலனத்தோடு சென்றவர், தன் காலில் ஏதோ தட்டுபட்டுக் கீழே குனிந்து பார்த்தார்.

அவர் காலடியில் மண்ணொலி பாம்போன்று நெழிந்து நெழிந்து சென்றது. இதை உற்றுப் பார்த் தவர் ''ஓகோ ''மண்ணுள்ளியோ'' என்று சொல் லிக் கொண்டு புறப்பட்டவர் கலைப்பு மிகுதியால் ஓர் மரத்தடியில் அமர்ந்துவிட்டார்.

அசந்து கவலையோடு அமர்ந்தவர், ''கண்ணா, பிண்ணா, காகுரையோ, கூகுரையோ, மண்ணுள் ளியோ'' என்று புலம்பிக்கொண்டிருந்தவனை அவ் வழியாக வந்த ஓர் பெரியவர் ''என்னப்பா புலம் பிக் கொண்டிருக்கிறாய்'' என்று கேட்டார்.

காலையிலிருந்து நடந்த அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்லி தன் நிலைமையை எடுத்துச் சொன்னார். ''எங்கே ஒருமுறை நீ சொன்னதைத் திரும்ப சொல் பார்ப்போம்'' என்று உத்தரவிட் டார் அந்தப் பெரியவர்.

''கண்ணா-பிண்ணா, காகுரையோ, கூகுரையோ மண்ணுள்ளியோ'' என்றதும் பெரியவர், ''ஆகா ஆகா அருமையான பாட்டு, அருமையான பாட்டு'' என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக்கொண்டே அவரை தட்டிக் கொடுத்தார். பெரியவருக்கு பைத்தியம் போலத் தெரிகிறது, அதுதான் இப்படி குதூகலிக் கிறார் என்று பேசாமல் இருந்தவனை, ''தம்பி நீ பாடிய பாட்டு வெகு பிரமாதம். இந்தப் பாடலை நான் சொல்வதுபோல் பாடினால் உனக்கு அரசர் வெகுமதியும், பரிசும் கிடைக்கலாம்'' என்றார்.

இதைக் கேட்டு திடுக்குற்றவர் ''என்ன எனக்கு அரச வெகுமதி கிடைக்குமா? எப்படி'' என்று ஆச் சரியத்தோடு கேட்டபோது, ''தம்பி நீ பாடிய பாடலை இப்படி பாடினால் உனக்கு அரச வெகு மதி நிச்சயம் கிடைக்கும்'' என்றார்.

''கண்ணா பிண்ணா,
காகுரையோ கூகுரையோ,
மண்ணுள்ளி மாப்பிளையே,
சோழப் பெருமானே நீ வாழ்க'

என்று பாடலையும் பாடிக் காட்டி, அதற்கு விளக் கமும் அளித்து அவனை உற்சாகப்படுத்தியதோடு, ''உடனடியாக அரசவை சென்று இந்தப் பாடலைப் பாடு'' என்றும் உத்தரவிட்டார். செய்வதறியாது நடுக்கத்தோடு நின்றவர், உடனடியாக அரண்மனை சென்று வாயில் காப்போனிடம் அனுமதி பெற்று உள்ளே சென்று ''அரசே வணக்கம். நான் ஒரு பாட்டுப் பாட வந்திருக்கிறேன்'' என்று சொல்லி முடிப்பதற்குள், சபையில் அமர்ந்திருந்த புலவர்கள் கைகொட்டி நகைத்தனர். ''தர்க்குரியான குறவர் பாடுவதா? பைத்தியம்'' என்றனர்.

உடனே சபையில் அரசவைப் புலவர் ஒருவர் எழுந்து ''ஏன் இப்படி நகைக்கிறீர்கள்? ஒருவர் பாடுவதற்கு வந்திருந்தால் அவரைப் பாடச்சொல்லி கேட்க வேண்டியது நமது கடமை. அதன் பொருள் அறிந்து பரிசுகள் வழங்கவேண்டியது அரசரின் கடமை. இதுதானே நியதி'' என்று கண்டிப்போடு சொன்னவர், ''அரசே அவரை பாட அனுமதிக்க வேண்டுகிறேன்'' என்று அரசரிடம் கேட்கவே, அர சரும் பாட அனுமதி கொடுத்தார். வந்தவர்,

''கண்ணா, பிண்ணா,
காகுரையோ, கூகுரையோ,
மண்ணுள்ளி மாப்பிளையே,
சோழப் பெருமானே நீ வாழ்க''

என்று பாடி முடித்தார். ஆஸ்தான புலவர் ''ஆகா .. அருமையான பாட்டு, அருமையான பாட்டு'' என்று கைதட்டி ஆரவாரம் செய்தார்.

''அரசே இச்சபையில் இதுவரையிலும் இத்தகை யப் பாடல் ஒன்றை யாரும் பாடவில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தப் பாடலின் பொருள் மதிக்கத் தக்கது, போற்றத் தக்கது'' என்றவர், அப் பாடலின் பொருளையும் அரசருக்கு விளக்கினார்.

''கண்ணா, பிண்ணா'' என்பதன் கருத்து, கொடுப்பதில் கண்ணனுக்கு அடுத்தவனே, ''காகு ரையோ'' என்றால் எங்களைக் காப்பாற்றும் இறைவா, ''கூகுரையோ'' என்றால், குடிகளின் குறை தீர்க்கும் இறைவா. ''மண்ணுள்ளி மாப்பி ளையே என்றால், மண்ணுக்கெல்லாம் அதிபதியே, சோழப் பெருமானே நீ வாழ்க என்பதாகும்'' என்று விளக்கமளித்தார்.

சபையில் அமர்ந்திருந்த அரசர் அரியாசனத்தை விட்டு இறங்கி வந்து, புலவரைக் கட்டித் தழுவி தன் கழுத்தில் அணிந்திருந்த வைர மாலையை கழற்றி அவருக்கு அணிவித்து பரிசுகள் வழங்குமாறு உத்தர விட்டார். அத்தோடு சபையில் புலவர் வரிசையில் முதலிடமளித்து அமர்வதற்கு ஆசனமும் போடப் பட்டது.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

## கலைமகள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

புலவர் வீடு செல்வதற்கு பல்லாக்கு தயார் செய்து பொன்னும், மணியும், ஆடை, ஆபரணங்கள் தந்து வழியனுப்பி வைத்தார்கள். வீட்டிற்கு வந்த அரச காவலன் ''புலவர் வருகிறார், புலவர் வருகிறார்'' என்று கூறி ஒதுங்கி நின்றான்.

காலையில் தன்னால் திட்டி விரட்டப்பட்டக் கணவர் இத்தனை சிறப்புகளோடு வருவார் என்பதை நினைத்துக்கூடப் பார்க்காத அவர் மனைவி ஓடி வந்து கணவரை ஆரத் தழுவி வீட்டிற்குள் அழைத்துச் சென்று அமர வைத்தாள்.

ஆனால் புலவரோ தன் மனைவியைப் பார்த்து ''என் புகழுக்குக் காரணமே நீதான். நீதான் தர்க்குரியாகக் கிடந்த எனக்கு கலைமகளாகத் தோன்றி அறிவுக் கண்ணைத் திறந்து பாடுவதற்கு அடியெடுத்து கொடுத்தாய். அதனால் இந்த சிறப்பு, மதிப்பு மரியாதை எல்லாம் உனக்கே சமர்ப்பணம்'' என்றார்.

''ஏதோ நான் காலையில் கோபத்தோடு விரட்டியதை மனதில் கொள்ளாமல் என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்'' என்று தலைகுனிந்து நின்றாள். ''இல்லை, இல்லை நீ சொன்ன அந்த ''கண்ணா, பிண்ணா'' என்ற வார்த்தையே என் நாவில் உதித்த முதல் வார்த்தை. மற்றதெல்லாம் அதன்பின் தொடர்ந்ததே. கலைமகள் என் அறிவுக் கண்ணைத் திறந்து பாட வைத்தாள்'' என்று நடந்த முழுக் கதையையும் சொன்னார்.

கதையைக் கேட்டு ஆச்சரியப்பட்டாள். ''ஆமாங்க உண்மையிலேயே அந்த கலைமகள் தான் நம் கண்ணைத் திறந்துவிட்டாள். அவள் அறிவுத் தெய்வமல்லவா'' என்று கூறி இருவரும் கலைமகளை வணங்கினார்கள்.

கலைமகள் கடாட்சம் மாத்திரமல்ல, தான் பாட வேண்டுமென்ற விடாமுயற்சியுமே அவரை ஒரு சிறந்த புலவராக உருவாக்க காரணமாக இருந்தது. ''முயற்சி உடையார் இகழ்ச்சியடையார்'' என்ற பழமொழிக்கொப்ப தர்க்குரியான ஒருவர் ஒரு சிறந்த அறிவாளியாகி, அரசவையில் புலவனாக அமர்ந்திருக்க இந்த முயற்சியே மூலக் காரணமாக அமைந்தது.

ஆதாரம்: வினோத மஞ்சரி.

— மாத்தளை ரோகினி —

### சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

## கட்டுரைத்தொகுப்பு

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழாவினையொட்டி இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் அடிகளாரின் வாழ்வும் பணிகளும் பற்றிய கட்டுரைத் தொகுப்பொன்றினை வெளியிட்டுள்ளது.

இத்தொகுப்பில், சு. சுசீந்திரராசா, செ. யோகராசா, வி. சிவசாமி, ஞானாம்பிகை குலேந்திரன், பெ. சு. மணி, கே. சுணபதிப்பிள்ளை, இ. பாலசுந்தரம், ஆர். நாகலிங்கம், எம். கடம்பநாதன், எம். ஏ. நுஃமான், மகேஸ்வரி பாலகிருஷ்ணன், எவ். எக்ஸ். ஸி. நடராசா, சி. தில்லைநாதன், பொ. பூலோகசிங்கம், ஆ. மு. ஷரிபுத்தீன், கா. சிவத்தம்பி, செ. வேலாயுதபிள்ளை, கே. எஸ். சிவகுமாரன், எஸ். எதிர்மன்னசிங்கம், த. கனகரத்தினம் ஆகியோர் எழுதிய இருபது கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

இந்நூல் கடந்த 19ம் திகதி சுவாமி அவர்களின் நூற்றாண்டு நினைவுநாளில் கண்டி டி. எஸ். சேனநாயக்க பொதுநூலக மண்டபத்தில் இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்களால் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதற்பிரதியை பேராதனை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கே. எம். குணதாசா பெற்றுக்கொண்டதோடு, சுவாமிகள் பற்றிய நினைவுரையும் ஆற்றினார்.

ரூ. 125/- பெறுமதியான இந்நூல் இந்துசமயத் திணைக்களத்தில் விற்பனைக்குள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மலையக புத்தகக் கண்காட்சி

காலத்தால் அழியாத இலக்கிய உணர்வுகளை உள்ளடக்கிய மலையசத்தின் வரலாற்றை அதன் சிறப்பை மங்காது மறையாது காக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தில் மலையக புத்தகக் கண்காட்சி ஒன்று ஜூலை 24, 25, 26 திகதிகளில் பண்டாரவளை நகரில் நடைபெற்றது.

லியோ மார்க ஆஸ்ரமத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கண்காட்சியில் மலையகத்தை மையமாகக் கொண்ட சகல அம்சங்களும் இடம்பெற்றது. இத்துடன் மலையக எழுத்தாளர், ஒன்றுகூடல், நூல் வெளியீடு போன்ற அம்சங்களும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



# அருள்மிகு ஆதிபராசக்தி அம்மன்!

எத்தனையோ பிரச்சினைகளுக்கிடையே மக்கள் மீள்வதற்கு ஒரு வழி தெரியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். நீண்டதொலைவிலிருந்து அவர்களால், மேல் மருவத்தூர் சென்று அன்னையை வழிபட முடியாது. இந்த நிலையில் அவதிப்படுகிறவற்கு வார வழிபாடு மன்றம் அன்னையின் அருளைப் பெற வாய்ப்பளிக்கின்றது. மக்களுக்கு அன்னையின் திருவருட் சிறப்பைப் புரிய வைத்துத் துன்பம் துடைக்கவே ஆதி பராசக்தி வாரவழிபாட்டு மன்றங்கள், அவள் அருளை அள்ளிப் பருகுங்கள், இச்சிறு சம்பவத்தை படியுங்கள்.

பரந்து கிடக்கும் வான வெளியை நோக்கும் போது, இந்த உலகம் கொய்யாப்பிஞ்சு! கொய்யாப் பிஞ்சு போல உள்ள இந்த உலகில் பல கோடி உயிர்க் கூட்டங்களில் மனிதன் ஒரு சிற்றெறும்பு! அவ்வளவுதான். ஆனால், இந்த அறிவும் ஞானமும் இல்லாததால், மனிதனும், மனித இனமும் அல்லல் படுகின்றனர். இந்த உயிர் வாழ்க்கை பற்றிய ஞானமும் தன்னைப்பற்றி அறிந்து கொள்ளும் அறிவு இல்லாததால், மனிதன் துன்பப்படுகின்றான் கவலை கொள்ளுகிறான்.

இவ்வுலகம் முழுவதும் ஒரு சக்தியின் வலிமையால், இயங்குகின்றது. அன்னை பராசக்தியே உலகின் சக்திகளுக்கெல்லாம் ஊற்றாக விளங்குகிறாள். மனக்கவலையை போக்குவதற்கு இறைவியை சரண் அடைய வேண்டும். 'ஓம் சக்தி சக்தி யென்று சொல்லு கெட்ட சஞ்சலங்கள் யாவையும் நீ வெல்லு'' என்கிறார் பாரதி.

சென்னையிலிருந்து திருச்சிக்குப் போகும் வழியில் செங்கல்பட்டு மாவட்டத்தில் மருவத்தூர் என்னும் சிற்றூரில் சுயம்பாகத் தோன்றி, ஆதி பராசக்தி அருள் பாலிக்கிறாள். அன்னையின் சித்தாடல்களைப் பற்றி கூற ஒரு புத்தகமே எழுதலாம்

தமிழ்நாடு முழுவதிலும் அன்னையை வழிபடும் மன்றங்கள் 1200க்கு மேலுண்டு. எமது நாட்டிலும் மருவத்தூர் சென்று அன்னையின் மண்ணை மிதித்து அருள்வாக்கு பெற்று அன்னையை வழிபடுவதற்கென கொழும்பில் ஒரு மன்றம் 12 ஸ்கூல் லேன் கொள்ளுபிட்டியில் இயங்கி வருகிறது, இம் மன்றத்தில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு கூட்டு வழிபாடு நடைபெறும்.



திருமதி சந்திரா கனகரத்தினம்

மதுரை மாவட்டத்தில் பரமத்தேவன் பட்டியிலுள்ளது ஆதி பராசக்தி மகளிர் வார வழிபாடு மன்றம். இந்தப்பகுதி மக்கள் தங்கள் வேண்டுதல்களை வார வழிபாட்டு மன்றத்தில் சென்று நிறைவேற்றுமாறு அன்னையை வேண்டிக் கொள்வார்கள். அவர்களின் கோரிக்கைகள் பலவும் நிறைவேறுவதுண்டு. இவ்வாறு பயன் அடைந்தவர் தங்கள் அனுபவங்களை மற்றவர்களிடம் கூறி வழிபாட்டில் கலந்து கொள்ளச் செய்வது வழக்கம். ஒருநாள் தாமரைச் செல்வி என்னும் பெண்மணி இம்மன்றத்துக்கு வாந்தார், அவருக்கு ஒரு பெரிய பிரச்சினை.

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# பொல்லா வினைகள் தீர்க்கும் நல்லூர் முருகன்

— எஸ். கே. யோகநாதன் —

எல்லாக் கண்டாமணிகள் தம் நாவசைவால் எழுந்த ஒலி ஓங்காரமாக, நாதப்பிரவாகமாக குளிர்ந்த காற்றோடு கூடி, உதய சூரியனின் மென் கதிர்களில் திளைத்துக்கொண்டிருக்கும் ஊரில் கவிந்து பரந்து படர்கிறது. திரளான மக்களது ''ஹர ஹர'' ஓசை வசந்த மண்டபத்திலிருந்து பொங்கி எழுந்து உள்வீதி, வெளி வீதிகளில் நெருங்கிய பக்தர்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும், உரைகளிலும் அலைமோதிச் செல்கிறது, இன்று கந்தன் கொடியேற்றம் காணும் நல்லநாள். அருள் சுரக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் ஆகம முறைப்படி அமைந்த திருத்தலமாகும். மூர்த்தி, தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற அடியார் வினை தீர்க்கும் முருகவேல் கருணை பொழி முகங்களோடு வீற்றிருக்கின்றான். சங்கடம் போக்கும் சண்முகன் சரவணப் பொய்கையிலே உதித்து அன்னை பராசத்தியால் அணைக்கப் பெற்று கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டான்,

சங்கத்தில் உதித்த சங்கரி சிவன் பாகமமர்ந்து சிங்கார வேலனுடன் சிருங்காரமாய் அமர்ந்து ஒய்யாரமாய் வீற்றிருக்கும் அழகேதனி, உற்சவம் என்பது மேலான செல்வம் எனவும் உத்தமயாகம் எனவும் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பது எனவும் ஆகம விதி கூறும். இதனை நடத்துபவர்களும் பாப்பவர்களும், நடத்துவிப்பவர்களும், புண்ணியவான்களே. ஆகவே நல்லூரில் விழாக்காணும் அத்தனை பேரும் அரும் பெரும் புண்ணியசீலர்களாவர், கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்றுக் கார்த்திகேயன் என்ற பெயர் பெறும் கந்தன் தொல்லைவினை நீங்கும் நல்லையிலே இல்லையெனாது அருளும் இன்னருட் தெய்வமாய் இலங்குகின்றான். நல்லூர் முருகனுக்குக் கொடியேறிவிட்டால் ஊரெல்லாம் விழாக் கோலம் பூண்டுவிடும்.

பக்தி வெள்ளம் கரை புரண்டோட தெய்வீகமான முருகானுபவத்தில் அன்பர்கள் திளைக்கின்றார்கள். பஜனைக் கோஷ்டி ஒரு பக்கம். அங்கப் பிரதட்சணம் செய்வோர் ஒரு பக்கம். தூக்குக் காவடி, பாற் காவடி, கரசம் ஆடுவோர் ஒரு பக்கம். நல்லூர் திருவிழாக் காட்சி, இன்னிசை வீணையர் எனத் தொடங்கும் திருப்பள்ளியெழுச்சியை ஞாபகப் படுத்தும். யாழ்ப்பாணத் தமிழரசர்களின் குலதெய்வமாகியும், தமிழ் மக்களின் உள்ளங்களிலே தான் இருக்கும் இடமாகவும் கொண்டு நல்லூரில் காட்சி கொடுத்தருள்பவர் நல்லைக் கந்தக் கடவுள். நல்லூர்த் திருவிழாச் சிறப்பையும், கோயிலின் அழகையும் சிந்தனையில் நிறுத்துவது நம் உள்ளங்களைப் புனிதப்படுத்துவதோடு ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஒட்டிக்கொண்டிருக்கும் சுயநலம், அகங்காரம் முதலிய மாசுகளைப் போக்கவும் வாய்ப்பாகும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் தோற்றத்தால் நல்லூர்க் கந்தன் புகழ் சிறப்படைந்தது. அதன் பின்னர் யாழ்ப்பாணச் சித்தர் பரம்பரையொன்று நல்லூர் முருகன் தேரடியில் உருவாகியதும் சிந்திக்கத்தக்கது. கடையிற் சுவாமிகள் சிஷ்யன் செல்லப்பா. இவர் எப்போதும் நல்லூர்த் தேரடியில் தவம் செய்வார். அங்கு வருவோரையெல்லாம் நாய், பேய், கரடி, புலி, சிங்கம் என்றுதான் அழைப்பார், தற்செயலாக யோகர் சுவாமி அங்கு வந்ததும் மனிதனென்றே அவரை அழைத்தார். காரணம்: மக்கள் போர்வையில் மிருகக் குணங் கொண்டவர்களையே அவ்வாறு அழைத்தார். தவத்திரு. யோகர் சுவாமிகள் செல்லப்பா சுவாமிகளின் சீடரானார், தான் பெற்ற இன்பம் இலங்கைத் திருநாட்டு தமிழ் மக்களும் பெற வேண்டுமென விழைந்த யோகர் சுவாமிகள் நல்லூர் முருகன் பெருமை, நல்லூர் தேரடியின் பெருமைகளை வியந்து தனது நற்சிந்தனையிற் கூறியுள்ளார்.

''நல்லூரான் திருவடியை நான் நினைத்த
மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனோடி கிளியே — இரவு பகல்
காணேனடி
ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச்
சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி கிளியே
நல்லூரான் தஞ்சமடி.''

என்றும் இன்னும் வேறு பல கீர்த்தனைகளையும் யாத்துள்ளார்.

''நல்லூரானைக் கும்பிட்டு பாடு - அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்'' என்றும்

பிணி, பகையாதியன நீங்கவும் நல்லூரான் பாடல்களை நற்சிந்தனையில் நாம் காண முடிகின்றது. எமது உயிரைக் காக்கும் இருதயமாகக் கருதத்தக்க நல்லூர் ஆலயம் புதிய மெருகுடன் விளங்குவதை அங்கு செல்லும் பக்தர்கள் உணர்ந்து இன்புறும் நிலை ஏற்பட்டுள்ளது. தெற்கே பழனியாண்டவர் ஆலயமும் திருக்குளமும் அமைந்திருப்பது தனியழகைத் தருகின்றது. இராச கோபுரமும், மணிக் கோபுரமும் நிறைந்த நல்லூர் முருகன் ஆலயத்தில் ஆறுபடை ஆலயங்களின் மூவர்ண ஓவியங்களும் ஆலயத்தின் உள் வீதி வடக்குச் சுவரிலே காணப்படுகின்றன. ஆறு படை வீடு செல்ல முடியாத முருக பக்தர்கள் நல்லூர் ஆலயம் வலம் வரும்போது அக் குறைபாட்டை நீக்க முடிகின்றது.

சந்தக் கடவுளைக் கைதொழுதால் வந்த வினை அறும். பழவினை பறந்தோடும். சந்ததமும் சண்முகனைத் தியானித்தால் சர்வ ரோகமும் நீங்கப் பெற்று சந்தோஷ வாழ்வு கிட்டும். செல்வச் சந்நிதியை அன்னதானக் கந்தன் என்றும், கதிர்காமத்தை அருள் வழங்கும் கந்தன் என்றும், நல்லூரை அலங்காரக் கந்தன் என்றும் கூறுவர். ஆகவே நல்லைக் கந்தன் நல்விழாப் பொலிவு காண இரண்டு கண்கள் போதா. ''செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே'' என அருணகிரியார் அங்கலாய்த்தார். அருள் மணக்கும் ஆலயமாக விளங்கும் நல்லூர் இன்று மக்களின் துயர் துடைக்கும் திருத்தலமாகவும் மிளிர்கின்றது. கஷ்டமுறும் வேளை

(தொடர்ச்சி 28ம் பக்கம்)

# மலையக இந்து நிறுவனங்களும் கல்வித் துறையும்

— கோ. சேனாதிராஜா —

மலையக இந்துப் பெற்றோர்கள் தம் சிறார்களை விடுமுறை நாட்களில் நடாத்தப்படும் சமய வகுப்புகளுக்கு அனுப்புகின்றபோது தம் பிள்ளைகள் கட்டாயம் சமய வகுப்புகளுக்கு சமூகமளிக்க வேண்டும் என்கிற மனநிலையினை உடையவர்களாக இருப்பது மிகக்குறைவு. பலபெற்றோர்களிடம் இதுகுறித்து வினாவியபோது அவர்கள் அளித்த விடைகளில் பல அம்சங்கள் அடங்கியிருப்பதை அவதானிக்க முடிந்தது.

அவ் அம்சங்களை பின்வருமாறு இனம் காட்டலாம்:

1) சமய வகுப்புகள் ஒழுங்கு முறைப்படி நடாத்தப்படுவதில்லை.

2) சமயவகுப்புகளுக்கு தவறாது சமூகமளிக்கும் மாணவர்கள்கூட போதிய சமய அறிவினை பெறத்தவறிவிட்டனர்.

3) மாணவர்கள் சமய அறிவினை பெறுவதைவிட இந்து நிறுவனங்கள் தாம் சமய வகுப்புக்களை திறம்பட நடத்துகிறோம் என்பதை காட்டுதல் செய்வதிலையே பெரும் கவனமெடுக்கின்றனர்.

ஆயின் பெற்றோர்களின் இவ்வாறான மனநிலைக்கான காரணத்தை உய்த்தறிவதற்காக சமய வகுப்புகளை நடாத்திச்செல்லும், இந்து நிறுவன அங்கத்தினர்களையும் சந்தித்து உறையாட வேண்டிய கடப்பாடுயிருந்தது. அவ்வாறு இந்நிறுவன அங்கத்தினர்களிடம் உரையாடி பெற்ற சில விடயங்களுக்கும் பெற்றோர்கள் அதிருப்தி கொண்டுள்ள விடயங்களுக்கும் இடையே பெரியதொரு இடைவெளிக்காணபடுமாற்போன்று உள்ளது.

இந்து நிறுவன அங்கத்தினர்கள் முகம்கொடுக்கும் சில பிரச்சினைகள் கீழே தரப்படுகின்றன.

1) இந்துசமய வகுப்புகளை நடாத்த போதிய பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பற்றாக்குறை.

2) நிதிவசதியின்மை.

3) பெற்றோர்களின் போதிய ஆதரவு கிடைக்காமை.

4) தொடர்ச்சியாக சமயவகுப்புகளை அல்லது அறநெறிபாடசாலைகளை நடாத்துவதற்கு இயலாமை (இடவசதி உட்பட).

மேற்கூறப்பட்ட நான்காவது காரணம் குறித்த சமய வகுப்புகள் நடாத்தப்படும் பாடசாலையில், விடுமுறைதினங்களில் வேறுவிதமான நிகழ்ச்சிகள் ஒழுங்குசெய்யப்பட்டின் சமய வகுப்புகளை இரத்து செய்யும் நிலை தோன்றும்.

எனவே, இவ்விருசாரரின் மனநிலையும், பாதிப்புகளும், எதிர்நேர்க்கும் பிரச்சினைகளும் ஒவ்வொரு கட்டத்திலும் மாறுபாடானதாக அமைந்திருப்பினும் இந்துமதத்தின் தாற்பரியத்தை விளங்கிக்கொள்ளுதல், பேணுதல், வளர்த்தல் தொடர்பில் ஒன்றினையை வேண்டிய கட்டாயத்துக்குள் வாழ்கின்றார்கள். சமத்துவம், புரிந்துணர்வு, கொள்கையளவேனும் இணக்கம், உடன்படிக்கை என்னும் அம்சங்களினால் ஒன்றிணையும் தத்துவத்தை பெறக் கூடியதாய் எப்போதும் இருக்கும்.

ஆயின், சமய வகுப்புகளை அல்லது அறநெறி பாடசாலையொன்றை நடாத்திச் செல்லும் இந்து நிறுவனம் மிகப்பிரதானமான மூன்று காரணிகளினால், சமய வகுப்புகளினால் அடையபெறும் நன்மைகள் குறைவடைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. அக்காரணங்கள் கீழ்வருமாறு.

1) மாணவர்களின் வரவில் ஒழுங்கின்மை.

2) நிதிபற்றாக்குறை.

3) போதிய ஆசிரியர்கள் இன்மை.

முதலாவது காரணத்தை விளக்கி கூறமுற்படும்போது, தொடர்ச்சிமக மாணவன் மனதை சென்றடையக் கூடியதான கற்பிக்கும் ஆசிரியரின் தரம் பேணப்படாமை. ஒழுங்குமுறைப்படி தயாரிக்கப்பட்ட பாடதிட்டம் இல்லாமை என்னும் காரணங்களினால் தொடர்ச்சியாக சமய வகுப்புகளுக்கு சமூகமளிக்கும் மாணவன் ஏனைய சகமாணவர்களைவிடவும் போதியளவு சமய அறிவினை பெறுகிறான் இல்லை மேலும் தொடர்ச்சியான சமய வகுப்புகளினால் ''திகட்டல் நிலை'' தோன்றுகிறது எனவே சமய வகுப்புகளில் கலந்துக் காலப்போக்கில் ''விருப்பமின்மை'' ஏற்படுகிறது. எனவே மாணவர் வரவில் ஒழுங்கின்மை ஏற்படுகிறது. சிறந்த சமய அறிவுடைய ஆசிரியர்களை பாடங்கள் போதிப்பதற்கு தெரிவுசெய்தல், சமய பாடங்களோடு கணிதம், ஆங்கிலம், போன்ற பாடங்களையும் கற்பிக்க ஒழுங்கு செய்தல், மாணவனை கவரக்கூடிய முறையில் பாடதிட்டத்தை தயாரித்தல், காலத்துக்கு காலம் இந்து சமய போட்டிகள் என்பனவற்றை ஆரம்பித்தல் பேணுதல் எனும் அம்சங்களினால் ஓர்மாணவனை வரவில் திருப்திகாட்டும் அளவிற்கு கவரமுடியும் இனி பெற்றோர்களும் தம் சிறார்களை சமய வகுப்புகளுக்கு அனுப்புவதில் அதிக கரிசனை காட்டுவர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## அருள்மிகு ஆதிபரா . . .

(25ம் பக்கத் தொடர்ச்சி)

அவருடைய கணவனுடைய உத்தியோகம் போய் விட்டது. ஏதோ காரணத்தால் எட்டு மாத காலம் மீண்டும் வேலை பெற பாடுபட்டார். ஆனால் கிடைக்கவில்லை. அன்னையை மனமுருக வேண்டினார். தாமரைச்செல்வி கூட்டுவழிபாட்டில் தவறாமல் கலந்து கொண்டார். ஒருநாள் அந்தப் பெண்ணுக்கு கனவில் அடிகளார் தோன்றினார். அந்தப் பெண்மணி அடிகளார் திருவடிகளில் விழுந்து வணங்கி, அம்மா என் கணவருக்கு வேலை கிடைக்க அருள் பாலிக்க வேண்டும்'' என்று கனவிலேயே கேட்டாள். அது கேட்ட குருபிரான் ''இந்தாம்மா'' என்று சொல்லி ஒரு ஃபைல் போன்ற ஒரு புத்தகத்தை கொடுத்துவிட்டு, மறைந்து விட்டார். கனவு கலைந்து எழுந்த அந்தப் பெண்மணி கணவரை எழுப்பி கனவில் நடந்ததைச் சொல்லி, ''நீங்கள் மீண்டும் உங்கள் மேலதிகாரியை போய்ப் பாருங்கள்'' என்று வற்புறுத்தி அனுப்பி வைத்தார். அங்கேதான் அம்மாவின் சித்தாடல்'' ஆம் மேலதிகாரியை அவர் போய்ப் பார்த்ததும், வேலைக்குரிய ஆணையைக் கொடுத்து 1-10-89 ஆம் நாளில் வேலையைத் தொடங்கலாம்'' என அதிகாரி கூறினார். வீடு திரும்பியதும் மனைவியிடம் எல்லாவற்றையும் கூறி ஆனந்த பரவசம் அடைந்தார்'

இத்தனைக்கும் அந்தப் பெண்மணி மேல்மருவத்தூர் சென்றதுமில்லை. அடிகளாரைச் சந்தித்ததுமில்லை வாரவழிபாட்டில் கலந்து அன்னையை நம்பி வழிபட்டதன் காரணமாக அவரின் குடும்பப் பிரச்சினையை தீர்த்து அருள் பாலித்தாள் அன்னை ஆதி பராசக்தி - ஓம் சக்தி.

## தாமரைத் . . .

(10ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு அற்றவர்களுக்கு அன்புகரம் நீட்டும் திருகோணமலை ''அன்பர் நிதியம்'' இதனை வெளியிட்டு இருக்கின்றார்கள். ''தாமரைத்தீவான்'' ஏழைக்கு ஏற்ற என்று உருண்டை ஒன்றை தம்மால் முடிந்த மட்டும் நமது தமிழ் இலக்கியத்திற்கு பரிமாறி இருக்கின்றார். கிருஷ்ண பரமாத்மா பெருமனதோடு குசேலரை அன்போடும் பண்போடும் கடாட்சத்தோடும் ஆதரித்ததுபோல நாமும் நமது இளமும் இந்த அருமையான நூலையும் அதன் ஆசிரியரையும் ஆதரித்து ஊக்குவிப்பது நமது தலையாய கடமையாகும்.

## பொல்லா . . .

(26ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கைதொழுது ''கந்தா! என் செயலாவது யாதொன்றுமில்லை. யாவும் உன் செயலே'' என்று தம்மை முற்றாக அவனிடம் ஒப்படைத்து அர்ப்பணித்துவிடும் பக்த கோடிகளை என்றுமே அவன் பதைபதைக்க விட்டதில்லை. அத்தகைய அற்புதக் காட்சி தந்து ஆனந்த மயமான நிகழ்வுகளை அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும் அதன் அருமை. தொல்லை வினை எதுவானாலும் தீர்ப்பான். எழில் குலவும் இடங்களையெல்லாம் தனதாக்கிக் கொண்டவன் முருகன். குன்றெல்லாம் எங்குண்டோ அங்கெல்லாம் தனது கோயில் இருப்பதாகவும் அவன் கூறுகிறான். பழமுதிர்ச் சோலைகளும் குன்றுகளுமே அவன் குடியிருப்பு. குன்று தோறும் எதற்காகக் குமரன் கோயில் கொள்கிறான்? குன்றின் உச்சியில் வீற்றிருக்குமவன் அச்செயல் மூலம் அயனெனவாகி, அரியெனவாகி, அரனெனவாகி அவர் மேலானாகிய யான் குன்றாக உயர்ந்து நிற்கும் உள்ளங்களிலேதான் கோயில் கொள்வேன் எனக் கூறாமற் கூறுகின்றானென்பதைத் தவிரக் ''குன்று தோறாடும் குமரன்'' என்பதற்கு வேறு பொருளெதுதான் இருக்க முடியும்? முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் பெருமையைப் பாடிப் பாடி உயர்வடைந்த புலவர்களும், பக்தர்களும் கணக்கற்றோர். முருகன் சம்புவின் நுதற் கண்ணிலே பொறியாகத் தோன்றிய திருவிளையாடலும், கங்கையை அடைந்த வரலாறும், சரவணப் பொய்கையில் கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டமையும், அயனைச் சிறை செய்தமையும், ஆட்டிலேறி விளையாடியமையும், அசுரர்களை வேரறுத்தமையும், தெய்வயானை - வள்ளிநாயகியை மணம் புரிந்தமையும் அப்பப்பா முருகன் பெருமையை, கருணையை எல்லாம் நினைவு கூரும் படிக்கட்டுகளல்லவா? இத்தகைய வலிமையும், திறமையும் கொண்ட முருகனுக்கு வாரத்தில் வெள்ளியும், நட்சத்திரத்தில் கார்த்திகையும், திதியில் சஷ்டியும் சிறப்புடையன. இக்காலங்களிலெல்லாம் முருகன் கருணை வேண்டி விரதமிருந்து வணங்கி வழிபட்டு கருணையும் கடாட்சமும் பெறுவோம். அலங்காரக் கந்தனாம் நல்லூர்க் கந்தன் எந்தாயும் எமக்கருள் தந்தையும் நீயே கந்தா கதிர்வேலா எம்வினை தீர்த்தருள்வாய் குகனே என எண்ணற்ற மக்களால் போற்றி வணங்கப்படுகிறான். கண் கண்ட தெய்வமான முருகன் அடியார்க்கு எளியன். அழகு நிரம்பிய முருகனை வழிபட்டு எல்லா நலமும் இந்நானிலமதில் பெற்று இனிதே வாழ்வோமாக.

## மகாலட்சுமி கடாட்சம் . . .

(8ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சூடாமணி அவர்களே, உங்களுடன் கதிர் காம யாத்திரை செய்யும் பாக்கியம் கிடைத்தபோது வழியிலுள்ள தலங்கள் தோறும் அவ்வத் தெய்வங் களுக்கு ஏற்ப தேவ ஆரங்களை சூடி மகிழ்ந்ததை நாம் கண்டும் கேட்டும் பரவசம் ஆனோம் வானில் பறந்து வந்த நீங்கள் எம்முடன் தரையில் வானில் வந்தபோது உங்கள் பேச்சிலும் மூச்சிலும் வானத் துத் தேவரையும் மூவரையும் அன்றி வேறேதாவது பேசினீர்களா. அப்படி வானத்துத் தேவரையும் மூவ ரையும் பாடிப் பாடித் தேவ ஆரங்களைச் சூடுவீர் என்றோ சூடாமணி என்ற பேரோடு பிறந்தீர்கள். தோன்றும் போதே புகழ் நாமத்தோடு தோன்றிய சூடாமணிக்கு நாம் ஒரு பட்டம் சூட்டி மகிழ இருக்கிறோம்.

இந்த விருதானது நாமே அகமகிழ்ந்து தருகின் கின்றோம் என்பதனால் இதன் மதிப்பு அளப்பரியது. இலங்கைத் திருநாட்டின் தலைநகரின் நுழைவாயிலில் இந்தப் புண்ணிய பூமியில் கிடைக்கிறது இந்த விருது.

ஆதியிலே அகத்தியர் தமிழாய்ந்த புண்ணியம் மிக்க பூமி இது. முத்தமிழ் முருகனே தலைமைத் தமிழ்ப் புலவனாய் வீற்றிருந்து சங்கம் வளர்த்து தமிழ் வளர்த்த வள நாடு இது. பின் நாளில் அநு மன் இலங்கை வரமுன் பொதிய மலையில் வைத்து அகத்தியரிடம் ஆசி கேட்க மாமுனிவர் சொன்ன வார்த்தைகளை இங்கு ஞாபகமூட்டுகிறேன்.

''அநுமனே அநுமனே, நீ இலங்கை போகிறேன் என்கிறாயே. பார்க்கும் இடமெல்லாம் சிவலிங்கங் கள் இலங்கை மண்ணிலே கால் வைக்கும்போது மிக அவதானமாக இறங்க வேண்டும். தப்பித் தவறியா வது உன் கால்கள் சிவலிங்கத்திலே பட்டுவிடக் கூடாதே அப்படிப்பட்ட சிவபூமியிலே கிடைக்கின்ற விருது மதிப்பிலே அளப்பரியது, என்று கூறி இசை யுடன் கூடிய இனிய சொற்பெருக்காற்றினால் ஒரு ஆன்மீகப் பேரெழுச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக் கின்ற திருமதி சூடாமணி சடகோபனுக்கு ''உபந் நியாஸக் கலைமாமணி'' என்னும் பட்டத்தை ஆலய அறங்காவலர் செந்தில்வேள் சூட்டி அகமகிழ்ந்தார்.

பதில் நன்றியுரையில் சூடாமணி கூறியதாவது:-

உபந்நியாஸக் கலைமாமணி என்னும் பட்டத் தினை மிகப் பொருத்தமான மகிமை மிக்க மண் ணிலே, தன் பக்தன் செந்தில்வேளின் வேண்டு கோளுக்குச் செவிசாய்த்து ஸ்ரீ பூபால விநாயகப் பெருமானே தலைமை தாங்கும் விழாவிலே மூன்று பெரும் ஆலயங்களின் பிரதம அறங்காவலராக திறம் பட செயலாற்றுபவரும், தன்னையும் தன் பொரு ளையும் சமயத்திற்கும் சமூகத்திற்குமே அர்ப்பணித் துக் கொண்டிருக்கின்ற ஒரு சைவப் பெரியார் ஆகிய அவரிடம் இருந்து இந்தப் பட்டத்தைப் பெறுவதில் அளவு கடந்த ஆனந்தமும் புளங்காங்கிதமும் அடை கிறேன். அதுவும் இப்பட்டம் இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு தேவராஜ் அவர்களினதும் கல்வி அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் அவர்களினதும் அங்கீகார ஒப்பத்துடன் இருப்பது கண்டு இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன்.

உங்கள் சிவநெறிச் செல்வர் செந்தில்வேள் பேசு கையில் அவரது பேருரையை நான் மிக அவதான மாக செவிமடுத்தேன் அவரின் பக்தி தைரியத்தைப் பாருங்கள். நான் இங்கு வந்தபோது நினைத்தேன். கடந்த பல நாட்களாகத் தொடர்ந்து மழை அடை மழையாகப் பெய்கிறதே இந்த விழாவை ஆலயத் தின் உள்ளே நடத்தாமல் கங்கை கரையிலே ஏற்பாடு செய்திருக்கிறாரே. என்ன தைரியத்தில் மழை குழப் பாது என்று திறந்த வெளியில் இந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார் என அஞ்சினேன். ஆயினும் பக்தி மேலீட்டுடன் அவர் ஆற்றிய பேருரையில் விழாவுக்கு ஸ்ரீ பூபால விநாயகப் பெருமான் தான் தலைவர் என்று சொன்னாலும் சொன்னார். கார்மேகம் சூழ்ந் தாலும் மழைபெய்து குழப்பாது சீரோடு சிறப்பாக நடக்கிறதே இந்நிகழ்ச்சி என்ன அதிசயம் பாருங்கள் வருண பகவான் செந்தில்வேளின் அன்பிற்கு ஆட் பட்டமையை இங்கு காண்கிறோம்.

இத்தகைய ஒரு பக்தரோடு கதிர்காமம் செல்லும் வாய்ப்பு கிடைத்ததை ஒரு பெரும் பேறாகவே கருது கிறேன். வழியெல்லாம் பஞ்ச பூதங்களுமே இப்பக்த னுக்குத் துணை நின்றமையை நான் நேரிலேயே உணர்ந்தேன்.

இலங்கை நாட்டிலே எல்லாப் பொருட்களும் விலை கூட விற்பனையாகின்றன. ஆனால் தங்கம் மட்டும் மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுவதைக் காண்கிறேன். எந்த இடத்தில் எல்லாப் பொருட்களும் அதிக விலைக்கு விற்கப்பட்டு தங்கம் மட்டும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறதோ அங்கு மகாலட்சுமியின் அருட்கடாட்சம் இருக்கும் என்று சாஸ்திரங்கள் கூறு கின்றன அதனால் மகாலட்சுமியின் கடாட்சம் நிறைந்த திருநாடு இது. அதனால் தானே இத்தனை நெருக்கடிகளுக்கும் மத்தியில் இந்த நாடு செல்வச் செழிப்போடு விளங்குகிறது. பூமியைப் பாலனம் செய்யும் பூபால விநாயகர் வீற்றிருக்கும் நாடு இது. வள்ளியின் பொருட்டு வந்த வள்ளல் முருகன் இரு மாதர் புடைசூழ அருளாட்சி புரியும் புனித நாடு இது. நீங்கள் எல்லோரும் மிகமிகப் பாக்கியம் செய்தவர்கள்.

அரசர்கள் அக்காலத்தில் செய்வது போலவே, நீவிரும் பொன்னாடை, மாலை, பொன் தட்டிலே யானை, பொற்கிழிகள், பரிசில்கள் தந்து கௌரவித் தீர்கள். நீவிர் வாழ்க.

*With Best Compliments*

*of*

# *RENUKA INDUSTRIES*

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS OF ALL KINDS OF

## ALUMINIUM WARES

**170-172, OLD MOOR STREET, COLOMBO 12.**

TELEPHONE: **435579**

உன்னத சேவை செய்யும்
"இந்து கலாசாரம்"
மேலும் மேலும் வளர்ச்சிபெற
வாழ்த்துகின்றோம்!

சிறந்த அச்சுவேலைகளுக்கும் காலதாமதமின்றி பெற்றுக்கொள்ளவும்
நாடவேண்டிய இடம்

# நந்தன் அச்சகம்

8, கொடுகொடல்ல வீதி,
கண்டி.

Registered as a Newspaper at the G. P. O - No. 07/News/92

*Best Compliments*

*of*

RIKEN TIRE

# Jailaxmi Stores

HEAD OFFICE

**91-A Maliban Street, Colombo 11**
**Telephone: 26149, 541329.**
**Cable : " JAYEXPORT "**
**Telex 22744 JLS CE.**
**Fax 587240.**

BRANCH

**153, Union Place.**
**Colombo 2.**
**TEL 548547, 547741**

இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி, என்பவரால், கொழும்பு-13 149-பி ஜெம்பட்டா வீதி, ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.